17.06.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### "காய்கறிகளை பரிசோதனை செய்து கொள்ளலாம்!'

காய்கறியில், பூச்சிக்கொல்லி மருந்து அதிகம் உள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளதால், மாதிரி கொடுத்து, உணவு பாதுகாப்பு துறையில் தர பரிசோதனை செய்து கொள்ள முடியும்.தேனி மாவட்டத்தில் இருந்து, கேரளாவிற்கு விற்கப்படும் காய்கறிகளில், பூச்சிக்கொல்லி மருந்து அதிகம் உள்ளதாக, கேரளா குற்றம் சாட்டியுள்ளது. 'தமிழகத்தில் இருந்து காய்கறி வாங்க வேண்டாம்' என அறிவுறுத்தப்பட்டுள்ளது.இந்நிலையில், தேனி மாவட்டத்தில் உற்பத்தியாகும் காய்கறிகளை, ஆய்வு செய்த வேளாண் அதிகாரிகள், 'பூச்சிக்கொல்லி மருந்து அளவு அதிகம் இல்லை' என, உறுதி செய்தனர். காய்கறி விலையை குறைத்து வாங்க, இதுபோன்ற முயற்சி நடந்ததாகவும் குற்றம் சாட்டினர்.இதற்கிடையில், 'காய்கறிகளை, உணவு பாதுகாப்புத் துறை ஆய்வகத்தில் பரிசோதிக்கலாம்' என, உணவு பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.உணவு பாதுகாப்பு துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது:சில நாட்களாக, காய்கறி, பழங்களில் பூச்சிக்கொல்லி மருந்து அதிகம் உள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளது. இதுபற்றிய சந்தேகம் இருந்தால், விவசாய பண்ணையாளர்கள், மொத்த கொள்முதல் செய்தோர், பொதுமக்கள் என, யார் வேண்டுமானாலும், மாவட்டங்களில் உள்ள உணவு பாதுகாப்புத் துறைஅலுவலகத்தை நாடலாம்.இதற்காக, சென்னை, கோவை, மதுரை, பாளயங்கோட்டை, தஞ்சாவூர், சேலம் என, ஆறு இடங்களிலும், உணவு பாதுகாப்புத்துறையின் ஆய்வகங்கள்

உள்ளன.இங்கு, மாதிரி கொடுத்து, பரிசோதனை செய்து கொள்ளலாம். அரசு நிர்ணயித்த கட்டணம் செலுத்த வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.- நமது நிருபர் -

**தங்கம் விளையும் தரிசு பூமி : மாற்றிக் காட்டிய பஞ்சாப் விவசாயிகள்**



ராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் அருகே உள்ள ஏ.தரைக்குடியிலிருந்து 3 கி.மீ., தொலைவில் போக்குவரத்து வசதி இல்லாத கிராமமாக உள்ளது வல்லந்தை. இங்கிருந்து ஒரு கி.மீ., தொலைவில், 105 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கியுள்ள பஞ்சாப், பீகார், உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வந்துள்ள 20 குடும்பத்தினர், அந்த தரிசு நிலத்தில் முற்றிலும் மாறுபட்ட பழப்பண்ணையையே உருவாக்கி உள்ளனர். இந்த பழப்பண்ணையில் தென்னை, மா, நாவல், பலா, நெல்லி, சப்போட்டா, கொய்யா, தர்பூசணி, வெள்ளரி, போன்றவற்றை பயிரிட்டு உள்ளனர். இப்பழப்பண்ணை மூலம் மாதம் 2 லட்சம் ரூபாய் வருமானம் ஈட்டி வருகின்றனர்.2007 ல் கருவேல மர காடாகவும், மண் மேடாகவும் இருந்த செம்மண் நிலத்தை விலைக்கு வாங்கி, 2009 வரை செவ்வனே சீரமைப்பு பணிகளை செய்து, குறைந்த சம்பளத்திற்கு வட மாநில தொழிலாளர்களை வரவழைத்து, வறண்ட பூமியை, வளமான பூமியாக மாற்றி உள்ளனர். இங்கிருந்து உற்பத்தியாகும் மா, கொய்யா, வெள்ளரி,

தர்பூசணி போன்ற பழங்களை கமுதி, அபிராமம் வியாபாரிகளுக்கு விற்பனை செய்தது போக, மதுரை, பெங்களூருவுக்கு மொத்தமாக வாகனங்களில் அனுப்புகிறார்கள். சமீபத்தில் ஒன்றறை டன் எடை "ஹிமாம் பசந்த்' வகை மாம்பழங்கள், பெங்களூருவுக்கு, கிலோ 210 ரூபாய் வீதம் அனுப்பியுள்ளனர். அவற்றுக்கு தமிழகத்தில் கட்டுபடியான விலை இல்லாதபோதும், கிடைக்கும் லாபத்தில் சந்தோஷமாகவே உள்ளனர். அவ்வளவாக தமிழ் தெரியாததால் உதவ, ஓய்வு பெற்ற அபிராமம் வி.ஏ.ஓ., செய்யது சேகனாவை மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பளத்தில் நியமித்துள்ளனர்.105 ஏக்கரில் விவசாய பணிகள் துவங்கியபோது, மின் இணைப்பு இல்லாததால், "ஜெனரேட்டர்' வசதியுடன் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தனர். அதன்பின், 50 ஆயிரம் ரூபாய் திட்டத்தில் 9 மின் இணைப்புகளை பெற்றுள்ளனர். மேலும் 4 இணைப்புகளுக்காக விண்ணப்பித்து காத்திருக்கின்றனர். இந்நிலம் பஞ்சாபை சேர்ந்த 32 பேர் கொண்ட ஒரு அறக்கட்டளைக்கு சொந்தமானது.குடிநீர் வசதியில்லாததால், உவர்ப்பு நீரை, சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தி வருகிறார்கள்.விவசாயி தர்ஷன் சிங் கூறுகையில்,""விவசாயத்திற்காக பஞ்சாபில் கடுமையாக உழைத்தும் போதிய வருமானமில்லை. அங்கு நிலமும் இல்லை. அதனால் குறைந்த முதலீட்டில், வல்லந்தையில் தேவையான அளவு இடத்தை வாங்கி, கொய்யா, நெல்லி, மா வகைகளான "பங்கனபள்ளி', "ஹிமாம் பசந்த்', "அல்போன்சா', மற்றும் நாட்டு மாமரச் செடிகளை பயிரிட்டு வளர்க்கிறோம். தமிழக அரசிடமிருந்து மானியம் கிடைத்தால், தரிசு நிலங்களை தங்கம் விளையும் பூமியாக மாற்றுவோம். வல்லந்தையை போல், அபிராமம் அருகே நகரத்தார்குறிச்சி, அச்சங்குளம், ஏ.தரைக்குடி, டி.புனவாசல் ஆகிய பகுதிகளிலும், பல நூறு ஏக்கர் பரப்பளவில் எங்களது உறவினர்கள் விவசாயம் செய்து வருகின்றனர்.

போக்குவரத்து வசதி செய்து கொடுத்தால் மா, கொய்யா, மாதுளை பழ வியாபாரிகளுக்கு, குறைந்த விலையில் பழங்களை விற்பனைக்கு வழங்குவோம்," என்றார்.

**பசுமைக்குடில் தொழில்நுட்பம்**



இன்று எங்கு பார்த்தாலும் பசுமை குடில் மூலம் விவசாயம் நடக்கிறது. வருடம் முழுவதும் காய்கறிகள், காளான் வளர்ப்பு, நாற்று உற்பத்தி செய்து சம்பாதிக்கின்றனர். அது பற்றி அறிவோம். எதையும் உயர்த்திட, தரமான தொழில்நுட்பம் தேவை. கிணற்றில் நீர் இறைக்க மாட்டை பயன்படுத்தினர். மோட்டார் தொழில்நுட்பம் வந்து 300 அடிகளில் இருந்து கூட நீரை இறைத்து விவசாயம் செய்கின்றனர். அப்படிப்பட்ட தொழில்நுட்பம் தான் பசுமை கூடார விவசாயம் ஆகும். 90 முதல் 95% பயிர்கள் வயல்வெளிகளில் வளர்க்கப்படுகின்றன. ஆனால் வருடம் முழுவதும் வளர்க்க முடியாது. ஆனால் பசுமைக் கூடாரம் அமைத்தால் வருடம் முழுவதும் விவசாயம் செய்ய இயலும். குளிர்பிரதேசங்களில் அதிகப்படியான குளிரில் இருந்து பயிர்களை தொடர்ந்து காப்பாற்றி, உயர் மதிப்புள்ள பயிர்களை வளர்க்க ""பசுமைக் கூடார தொழில்நுட்ப முறைகள்" உருவாக்கப்பட்டன. காற்று, குளிர், மழை, அதிக சூரிய ஒளி, அதிக வெப்பம், பூச்சி மற்றும் நோய்களில்

இருந்து பாதுகாக்கிறது. பசுமைக் கூடாரம் என்பது ஒளி ஊடுருவக் கூடிய கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் போர்த்தப்பட்ட அமைப்பாகும். இதனுள் தேவையான தட்பவெப்ப நிலை உருவாவதுடன், இரவில் வெளியிடும் கரியமில வாயு உள்ளேயே தங்கி,

ஒளிச்சேர்க்கைக்கு உதவுகிறது. விளைச்சல் அதிகமாகிறது. ஈரப்பதம் குறையாது. அதிகநீர் தேவைப்படுவதில்லை. **பசுமைக் கூடார பயன்கள்**: பூச்சி, எலி, பறவைகளின் தாக்குதல் இல்லை. வெப்பம், பெரும் மழை, காற்று தடுக்கப்படும். பூச்சி மருந்து / உரங்களின் சரியான பயன்பாடு சாத்தியமாகும். தட்பவெப்பம் கட்டுப்படுவதால் வருடம் முழுவதும் எந்த பயிரையும் பயிர் செய்யலாம். ஆண்டு முழுவதும் காய்கறிகள், கொய்மலர்கள் கிடைப்பதால் லாபம் அதிகமாகிறது. இதனை அமைக்க சிறிது மேடான இடமாக இருக்க வேண்டும். தேவையான மின்சாரம் கிடைக்க வேண்டும். அருகில் மரம் / கட்டடம் இருக்க கூடாது. கிழக்கு - மேற்காக அமைக்க வேண்டும். வாய்க்கால் வடக்கு - தெற்காக அமைய வேண்டும். **அமைக்கும் முறை** : 4x2 மீ அளவில் செவ்வகமாக உருவாக்கலாம். 4 மூலைகளிலும் இரும்புக் குழாய்களை கான்கிரீட் மூலம் நிறுவ வேண்டும். பின் முடிவுச் சட்டத்தைப் பொருத்த வேண்டும். பக்கவாட்டு தாங்கிகளை பொருத்த வேண்டும். பின் தேவைப்படும் குழாய்களை நிறுவ வேண்டும். பின் கூடாரத்தின் மேல் பாலிதீன் தாள் கொண்டு மூட வேண்டும். காற்றோட்ட வசதி, சூடேற்றும் வசதி செய்ய வேண்டும். இதன் மூலம் கொய்மலர்கள், காளான், தரமான நல்ல விளைச்சல்களைப் பயிரிடலாம். கீழ்க்கண்ட வலைத்தளம் பாருங்கள். www.tnau.ac.in, www.icar.nic.in, www.tn.gov.inagriculture, www.agritech.ac.in.- எம்.ஞானசேகர்,விவசாய ஆலோசகர், 93807 55629

**சின்ன சின்ன செய்திகள்**



**மஞ்சள் :** தேவையைப் பொறுத்து களை எடுக்க வேண்டும். அடியுரமிட்ட 40 நாட்கள் கழித்து எக்டருக்கு 65 கிலோ யூரியா மேலுரமாக இட வேண்டும். எக்டருக்கு 5 டன் பசுந்தழை, களை எடுத்தவற்றைக் கொண்டு மீண்டும் பாத்திகள் மேல் பரப்பி மூடாக்கு இட வேண்டும். மிளகாய் : அறுவடை முடிந்தவுடன் அடுத்த பருவத்தில் மிளகாய் சாகுபடி செய்யவுள்ள நிலத்தில் பில்லிப்பசரா, தட்டைப்பயறு, சணப்பை போன்ற பசுந்தாள் பயிர்கள் விதைக்க வேண்டும். மிளகாய் அறுவடை முடிந்த பின் மிளகாய் செடிகளைப் பிடுங்கி துண்டுகளாக்கி மண்ணில் கலந்து விட வேண்டும். இதனால் மண்வளம் அதிகரிப்பதுடன் மண்ணின் நீர்ப்பிடிப்பு தன்மையும் அதிகரிக்கும்.

**புதிய ஸ்பைசஸ் பார்க்** : நாட்டின் மிகப்பெரிய ஸ்பைசஸ்பார்க் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள குண்டூரில் ஏப்ரல் 2015லிருந்து செயல்படத் துவங்கியுள்ளது. எடலப்பாடு மண்டலத்தில் குண்டூர் - சிலக்கலூரி பெட் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. இந்த பார்க் சுமார் 125 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. பொது மற்றும் தனியார் பங்கேற்பு என்ற முறையில் இது அமைந்துள்ளது. இது மிளகாய் விவசாயம் அறுவடைக்கு பிறகுள்ள செய்முறைகள் பேக்கேஜிங், சேமித்து வைத்தல் மற்றும் ஏற்றுமதி செய்யும் வசதி போன்ற ஒருங்கிணைந்த பயன்பாடுகளை உள்ளடக்கிய ஸ்பைசஸ்பார்க் ஆகும். ஒருமணி நேரத்தில் இரண்டு டன் மிளகாயைப் பதப்படுத்தும் திறன் கொண்ட எந்திரங்களை கொண்ட பார்க் ஆகும். ஒருமணி நேரத்தில் 500

கிலோ மிளகாயை நீராவி மூலம் சுத்தப்படுத்தும் நிலையமும் அமைக்கப்பட்டு வருகிறது.

**திரவநிலை சூடோமோனாஸ் புளூரசன்ஸ்** : பொதுவாக தூள் முறை சூடோமோனாஸ் புளூரசன்ஸ் ஆனது பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இத்தகைய துகள் முறை மூன்று மாதங்கள் மட்டுமே பயன்படுத்துவது மட்டுமல்லாமல் சொட்டுநீர்ப் பாசனத்திற்கு குழாய்களில் அடைபட்டு பாசனத்திற்கு தடையாய் அமைகிறது. இத்தகைய பிரச்னைகளுக்கு மாற்றாக திரவநிலை சூடோமோனாஸ் புளூரசன்ஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இத்தகைய திரவநிலையை நீண்டநாள் வைத்து பயன்படுத்தலாம். மேலும் அதிக எண்ணிக்கை அளவில் இத்தகைய முறை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சொட்டுநீர்ப்பாசனத்தில் எளிய முறையில் பயன்படுத்துவதற்கு ஏதுவாகவும் மற்ற முறைகளைக் காட்டிலும் இத்தகைய திரவ நிலை சிறப்பாக செயல்படுகிறது.

**விதை நேர்த்தி :** 10மிலி திரவ நிலை சூடோமோனாஸை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து அதனை ஒரு கிலோ விதையுடன் 10 நிமிடங்களுக்கு நேர்த்தி செய்ய வேண்டும். நாற்று களைத்தல், மண் மூலம் நேர்த்தி செய்தல், சொட்டுநீர்ப்பாசன மூலம் பயன்படுத்துதல் போன்ற முறைகளை கையாண்டு, தானியப் பயிர்களில் வேர்களைத் தாக்கும் நோய்கள், எண்ணெய்வித்து, பயறு வகைப் பயிர்களில் வேரழுகல், வாடல்நோய்கள், தோட்டக்கலைப் பயிர்களின் நாற்றமுக, வாடல்நோய், வாழையில் வாடல்நோய் போன்ற எல்லா மண்வழிக் காரணிகளையும் கட்டுப்படுத்தும்.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**நாவல் பழத்தை விட கொட்டைக்கு மவுசு; சர்க்கரை நோயாளிகள் வாங்குவதால் கிராக்கி**

சேலம் : தமிழகத்தில், நாவல் பழம் சீஸன் தீவிரமடைந்துள்ள நிலையில், சர்க்கரை நோயாளிகள், நாவல் பழம் கொட்டையை பவுடர் செய்து பயன்படுத்துவது அதிகரித்துள்ளதால், மவுசு அதிகரித்து, பழத்தின் விலையை விட, கொட்டையின் விலை கூடுதல் விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் மலைப்பிரதேசங்களில் இருந்தும், அதிக அளவில் நாவல்பழங்கள், விற்பனைக்கு வருகிறது. சீஸன் துவங்கி மூன்று வாரங்களுக்கு மேல் ஆகி விட்ட நிலையில், வரத்து தொடர்ந்து அதிகரித்த போதிலும், விற்பனையும் சூடு பிடித்துள்ளதால், நாவல் பழத்தின் விலை தொடர்ந்து உச்சத்தில் இருந்து வருகிறது. தமிழகத்தின் முக்கிய நகரம், மார்க்கெட், மக்கள் கூடும் இடங்களில் நாவல் பழங்கள் தரத்தின் அடிப்படையில், கிலோ, 240 ரூபாய் முதல், 260 ரூபாய் வரையிலும், 100 கிராம் எனில், 30 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.இந்நிலையில், "சர்க்கரை நோயாளிகள் நாவல் பழத்தின் கொட்டையை அரைத்து மாவாக சாப்பிட்டால், உடலில் சர்க்கரையின் அளவு குறையும்' என கூறப்படுவதால், நாவல் பழங்களை விட அதன் கொட்டையை பக்குவப்படுத்தி மாவாக்கி பயன்படுத்தி வருகின்றனர்.சேலத்தில், நாவல்பழத்தின் கொட்டை, பவுடர் விற்பனையில் வியாபாரிகள் செயல்படுவதோடு, ஆர்டரின் பெயரில் கொட்டை, பவுடரை சப்ளை செய்கின்றனர். தற்போது, கல்வராயன் மலைப்பகுதியில் இருந்தும், தர்மபுரி மாவட்டம் பென்னாகரத்தில் இருந்தும், அதிக அளவில் நாவல் பழ கொட்டைகள், பவுடர் விற்பனைக்கு வருகிறது.காய்ந்த நிலையில் உள்ள நாவல் பழ கொட்டை, கிலோ, 300 ரூபாய் முதல், 320 ரூபாய் வரையிலும், பவுடர், 100 கிராம்,

32 ரூபாய் முதல், 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. கொட்டைகள் நேரடியாக வியாபாரிகளிடம் கிடைக்கும் நிலையில், பவுடருக்கு, முன்பணம் செலுத்தி ஆர்டர் கொடுத்தால் மட்டுமே வியாபாரிகள் சப்ளை செய்கின்றனர்.

சேலம், கடைவீதி ஆற்றோர தெருவில், நாவல்பழ கொட்டை வியாபாரி குமார் கூறியதாவது:சர்க்கரை, இதய நோயாளிகள் நாவல் பழ கொட்டை, பவுடரை விரும்பி வாங்கிச் செல்கின்றனர். கொட்டையை நன்கு வெயிலில் காய வைத்து, பின்னர், அதை பவுடராக்கி, பால், வெந்நீர், நீர் ஆகாரங்களில் கலந்து சாப்பிடுவதால், உடலில் சர்க்கரையின் அளவு கட்டுப்படுத்தப்படுகிறது. அதனால், பலர் விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.இவ்வாறு, அவர் கூறினார்.

**வாழை கருகல் நோய் விவசாயிகள் விரக்தி**

மேட்டூர் : கொளத்தூர் பகுதியில், வாடல் நோயால் வாழை கருகுவது விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில் பண்ணவாடி, தண்டா, தார்க்காடு, செட்டியூர், கண்ணாமூச்சு சுற்றுப்பகுதியில், ஆண்டுதோறும், 1,000 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயிகள் வாழை சாகுபடி செய்வது வழக்கம். நடப்பாண்டு விவசாயிகள் கதலி ரக வாழையை, அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர்.கொளத்தூர் அடுத்த, கண்ணாமூச்சி பகுதியில், சாகுபடி செய்த மூன்று மாதத்தில், வாழை மரங்கள் வாடல் நோயால் கருகி வருவது விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:வாழையை பனாமா வாடல் நோய் அல்லது பாக்டீரியா வாடல் தாக்கும் பட்சத்தில், இலைகள் கருகி தொங்கி விடும். மேலும், சொட்டு நீர் பாசனம் மூலம் பொட்டாசியம் உரத்தை அதிகமாக

வாழைக்கு செலுத்தினாலும் இலைகள் கருகும். கண்ணாமூச்சி பகுதியில், வாழை எதனால் கருகியது என்பது ஆய்வுக்கு பின்பே தெரியவரும்.இவ்வாறு, அவர்கள் கூறினார்.

**ரூ.24 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்**

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டையில் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நடந்த மஞ்சள் ஏலத்தில், 630 மூட்டைகள், 24 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ராசிபுரம் அடுத்த, நாமகிரிப்பேட்டை, வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. இங்கு, தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், தங்கள் விளை நிலத்தில் சாகுபடி செய்த மஞ்சளை அறுவடை செய்து ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர்.அதன்படி, தலா, 65 கிலோ கொண்ட, 630 மூட்டைகள் ஏலத்தில் இடம் பெற்றது. அதில், விரலி ரகம், மூட்டைக்கு அதிக பட்சம், 8,141, குறைந்த பட்சம், 6,247 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம், மூட்டைக்கு அதிக பட்சம், 7,210, குறைந்த பட்சம், 5,385 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. பனங்காலி ரகம், மூட்டைக்கு 14 ஆயிரத்து, 73க்கும், குறைந்த பட்சம், 7,083 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 630 மூட்டை மஞ்சள், 24 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டது.

**ஜூலை மாதத்தில் குறுவை சாகுபடி; உரம் கையிருப்பு உள்ளதாக தகவல்**

ஈரோடு : ஜூலை மாத துவக்கத்தில், விவசாயிகள் குறுவை சாகுபடி செய்ய தயார் நிலையில் இருப்பதால், போதிய உரங்கள் கையிருப்பு உள்ளதாக, ஈரோடு வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, ஈரோடு வேளாண் துறை உதவி இயக்குனர் சண்முகசுந்தரம் கூறியதாவது:நடப்பு மாதத்தில், குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையில் இருந்து, தமிழக அரசு தண்ணீர் திறக்க இயலவில்லை. வழக்கம் போல் ஜூன், 12ம் தேதி பவானிசாகர் அணையில் இருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது வழக்கம். அரசு தண்ணீர் திறப்பது குறித்து, அறிக்கை அறிவிக்காததால் விவசாயிகள் பயிர் நடவு செய்ய தாமதம் ஆகிறது.தற்போது பல விவசாய சங்கங்களின் வேண்டுதலுக்கு இணங்க, வரும் ஜூலை, முதல் தேதியில் தண்ணீர் திறக்க வாய்ப்புகள் அதிகம் உள்ளன. அதற்காக அரசுக்கு பொதுப்பணித்துறை பரிந்துரை கடிதங்களும் அனுப்பியுள்ளன. இம்மாத இறுதியில், தண்ணீர் திறப்பது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும்.தண்ணீர் திறந்தால், பவானிசாகர் அணையில் இருந்து ஈரோடு, கொடுமுடி வரையில் உள்ள, 16,000 ஏக்கர் விவசாய பாசன நிலங்கள் குறுவை சாகுபடி பாசன வசதி பெறும். அதற்காக தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் கடைகளில் உரங்கள் கையிருப்பு உள்ளன.தற்போது, ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகளில், யூரியா - 1,026 டன், டி.ஏ.பி., - 420 டன், பொட்டாஷ் - 330 டன், காம்ப்ளக்ஸ் - 916 டன் கையிருப்பில் உள்ளன. தனியார் கடைகளில் யூரியா - 810 டன், டி.ஏ.பி., - 380 டன், பொட்டாஷ் - 510 டன், காம்ப்ளக்ஸ் - 610 டன்னும் உள்ளது. இந்த உரங்கள் குறுவை சாகுபடிக்கு போதுமானது.இவ்வாறு, அவர் கூறினார்.

**மாநில பூச்சி கொல்லி மருந்து; பரிசோதனை கட்டிடம் திறப்பு**

ஈரோடு : ஈரோடு, திண்டலில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், 60 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட, மாநில பூச்சி கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வக கட்டிடத்தை, வீடியோ கான்ஃப்ரன்ஸ் மூலம், முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.

இதுகுறித்து கலெக்டர் பிரபாகர் கூறியதாவது:மாநில பூச்சி கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வகம் மூலம், பூச்சிகொல்லி மாதிரிகளின் பௌதீக, வேதியியல் குணங்கள் ஆய்வு செய்யப்படும். ஆய்வின் மூலம், தரக்குறைவான, போலியான பூச்சி கொல்லி மாதிரிகள் கண்டறியப்பட்டு, பூச்சிகொல்லி சட்டம் - 1968ன்படி, மருந்துகளை தயாரித்தவர்களுக்கு ஆய்வு முடிவுகளின்படி, சட்ட ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.இதன் மூலம் தரமான பூச்சி கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு கிடைக்கும்.கருங்கல்பாளையம் பகுதியில் தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த, மாநில பூச்சி கொல்லி பரிசோதனை ஆய்வகம், இனி, புதிய கட்டிடத்தில் செயல்படும்.புதிய கட்டிடம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், 60 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.ஓராண்டுக்கு சராசரியாக, 850 பூச்சி கொல்லி மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு, 1,007 பூச்சி கொல்லி மாதிரிகள் பெறப்பட்டு, 884 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது இக்கட்டிடம் தவிர, சத்தியமங்கலத்தில், 1.20 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட உழவர் மைய கட்டிடம், ஒரு கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட குளிர் பதன கிடங்கு, பூலப்பாளையத்தில், ஒரு கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட ஒழுங்கு முறை விற்பனை கூட கட்டிடம் போன்ற ஏழு கட்டிடங்களை, முதல்வர் ஜெயலலிதா வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் திறந்து வைத்துள்ளார்.இக்கட்டிடங்களில் உள்ள அலுவலகங்கள் உடனடியாக செயல்பாட்டுக்கு வருகிறது.இவ்வாறு, அவர் கூறினார்.வேளாண் இணை இயக்குனர் விஸ்வநாதன், துணை இயக்குனர் சிதம்பரம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**பறவை காய்ச்சல் முற்றிலும் தடுக்க பண்ணையாளர்களுக்கு விழிப்புணர்வு**

ஈரோடு : பறவை காய்ச்சல் மற்றும் இதர நோய்களை தடுக்க, கோழிப்பண்ணை உரிமையாளர்களுக்கு, மாதந்தோறும் விழிப்புணர்வு நடத்த கால்நடைத்துறை திட்டமிட்டுள்ளதாக, ஈரோடு கால்நடைத்துறை இணை இயக்குனர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மேலும், இணை இயக்குனர் கூறியதாவது:ஈரோடு மாவட்டத்தில், 400 பிராய்லர் கோழிப்பண்ணை, 80 முட்டை கோழிப்பண்ணை மற்றும், 500க்கும் மேற்பட்ட சிறு நாட்டுக்கோழி பண்ணைகள் உள்ளன. ஈரோட்டில் இருந்து கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாவட்டங்களுக்கும், அண்டை மாநிலங்களில் இருந்து, ஈரோடு மாவட்டத்துக்கு கோழிகள் வரத்து உள்ளன.கடந்த ஆண்டும், கடந்த மாதங்களிலும் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில், பறவைக்காய்ச்சல் நோய் தாக்கியதால், பல்லாயிரம் கோழிகள் இறந்தன. இதனால் பண்ணையாளர்கள் நஷ்டம் அடைந்ததுடன், தொழிலை நடத்தாமல் முடக்கி வைத்தனர்.அண்டை மாநிலங்களில் இருந்து வரும் கோழி வாகனங்களில், பறவை காய்ச்சல் நோயை கட்டுப்படுத்த, மருந்து தெளிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் அதிகாரிகள் ஈடுபட்டு வந்தனர்.எனினும் பறவை காய்ச்சல் நோய் இல்லை. தொடர்ந்து பண்ணாரி, திம்பம், அந்தியூர் பகுதிகளில், சோதனை சாவடி அமைக்கப்பட்டு, தற்போதும் அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.தற்போது, ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து கோழி பண்ணை உரிமையாளர்களுக்கும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மாதந்தோறும் பறவை காய்ச்சல் குறித்து விழிப்புணர்வு முகாம் நடத்த, ஈரோடு கால்நடைத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.அதன் படி, பண்ணையில் பலியாகும் கோழிகளை, ஈரோடு கோழிகள் ஆய்வுக்

கூட ஆராய்ச்சி மையத்துக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம். அதன் மூலம், என்ன நோய் தாக்கி, கோழி இறப்புக்கு ஆளானது என்பது தெரிய வரும். இவ்வாறு, அவர் கூறினார்.

**ஊட்டியில் தேயிலை பூங்கா புதிதாக திறப்பு**

ஊட்டி:ஊட்டியில், அரசு தோட்டக்கலைத்துறையின், ஐந்தாவது பூங்கா, மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டது.ஊட்டி -- கோத்தகிரி சாலையில், தொட்டபெட்டா மலை சிகரம் அருகே, 10 ஏக்கர் பரப்பளவில், 79.90 லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தேயிலை பூங்காவை, நேற்று முதல்வர் ஜெயலலிதா, 'வீடியோ கான்பிரன்சிங்' வாயிலாக திறந்து வைத்தார். மாவட்ட கலெக்டர் சங்கர், பூங்கா செயல்பாடுகளை துவக்கி வைத்தார்.நிகழ்ச்சியில், மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி, மாவட்ட ஊராட்சித் தலைவி மேனகா, மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் மணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தேயிலை பூங்காவில் என்ன உள்ளது?:ஒன்றரை கி.மீ., துாரம் தேயிலை தோட்டங்களின் இடையே, பயணம் செய்து, ஆங்காங்கே உள்ள தேயிலை வரலாற்று குறிப்புகளை அறிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தேயிலை துாள் தயாரிப்பு முறை குறித்த, மாதிரி உபகரணங்களும் வைக்கப்பட்டுள்ளன. மலர் படுக்கைகள், சிறுவர்கள் விளையாடி மகிழ விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு, 15 ரூபாய், சிறுவர்களுக்கு, 10 ரூபாய், கேமராவுக்கு, 25 ரூபாய், வீடியோ கேமராவுக்கு, 50 ரூபாய், நான்கு சக்கர வாகனத்துக்கு, 40 ரூபாய், மூன்று சக்கர வாகனத்துக்கு, 10 ரூபாய், மேக்ஸி கேப் வாகனத்துக்கு, 70 ரூபாய், பஸ்சுக்கு, 100 ரூபாய் என, கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**மலை காய்கறியை சந்தைக்கு அனுப்பும் பணிகள் துரிதம்**

மஞ்சூர்:ஊட்டி அருகே பாலாடாவில், அறுவடைக்கு தயாரான மலை காய்கறிகளை சந்தைக்கு அனுப்ப விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஊட்டி அடுத்துள்ள எம்.பாலாடா, முத்தோரை, நஞ்சநாடு, கல்லக்கொரை, எல்லக்கண்டி உள்ளிட்ட பகுதிகளில் பல ஏக்கரில் கேரட், உருளைக்கிழங்கு, பீட்ரூட், முட்டை கோஸ் உள்ளிட்ட மலை காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளது.தற்போது, மலை காய்கறிகளுக்கு சந்தையில் ஓரளவுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது.

தயாரான மலை காய்கறிகளை சந்தைக்கு அனுப்ப இருப்பதால், மலைகாய்கறி தோட்டத்தில் உள்ள உருளைக்கிழங்கு, பீட்ரூட் போன்றவைகளை மூட்டைகளாக கட்டி விவசாயிகள் தயார் செய்து வருகின்றனர்.விவசாயி ராமன் கூறுகையில், "மலை காய்கறிக்கு சந்தையில் ஓரளவுக்கு நல்ல விலை கிடைத்து வருவதால், தயாரான காய்கறிகளை சந்தைக்கு அனுப்பி வருகிறோம். விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு தேவையான இடு பொருட்களை மானிய விலையில் அரசு அளித்தால், இன்னும் மலை காய்கறி விவசாயத்தை மேம்படுத்த முடியும்," என்றார்.

**ரூ.1,050 விலை நிர்ணயம் செய்ததால் நெரூர் பகுதியில் 100 லோடு கோரைப்புல் தேக்கம்**

கரூர்: கோரை கட்டு ஒன்று, 1,050 ரூபாய்க்கு குறைவாக விற்பதில்லை, என விவசாயிகள் முடிவு செய்துள்ளதால், மூன்று நாட்களில், நெரூர் பகுதியில், 100 லோடு கோரை தேக்கமடைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில், காவிரி ஆற்றங்கரையோர பகுதிகளான வாங்கல், என்.புதூர், பிச்சம்பாளையம், கடம்பங்குறிச்சி, தளவாய்பாளையம், தோட்டக்குறிச்சி, நெரூர், மரவாப்பாளையம், புதுப்பாளையம்,

திருமாகூடலூர், அச்சமாபுரம், சோமூர், வேலாயுதம்பாளையம், நொய்யல் உள்ளிட்ட பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கரில், பாய் பிண்ணுவதற்கான கோரை பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. இது தவிர, நாமக்கல் மாவட்டத்தில் வேலூர்,மோனூர் பகுதியிலும், திருச்சி மாவட்டத்தில் பெட்டவாய்த்தலை பகுதியில், 15 ஆயிரம் ஏக்கரில் கோரை சாகுபடி செய்யப்படுகிறது.இங்கு சாகுபடி செய்யப்படும் கோரைப்புல், பாய்கள் தயாரிப்பதற்காக சேலம், குறிச்சிப்பாடி, தர்மபுரி ஆகிய பகுதிக்கு அனுப்பப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் ஒத்தக்கடை, கல்லுப்பாளையம், அச்சமாபுரம், குளித்தலை போன்ற இடங்களில், கோரை பாய் தயாரிக்கும் தொழில் கூடங்கள் செயல்படுகிறது.கடந்த சில வாரங்களாக, கோரை அறுவடை பணி தீவிரமாக நடக்கிறது. ஐந்து முடிக்கொண்ட ஒரு கோரை கட்டு, 750 ரூபாய்க்கு வியாபாரிகள் வாங்கியதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். கரூர் மாவட்ட கோரை உற்பத்தியாளர்கள் சங்க ஆலோசனை கூட்டம், கடந்த, 14ம் தேதி நெரூரில் நடந்தது. கூட்டத்தில், ஐம்பது இஞ்ச் கோரை, 1,050 ரூபாய், மார்பளவு கொண்ட கோரை, 750 ரூபாய்க்கு குறைவாக விற்பதில்லை, என முடிவு செய்யப்பட்டது. வியாபாரிகளுக்கு கோரை விற்கப்படாமல் இருப்பதால், வயல்களில், 30 கட்டு முதல், 40 கட்டுரை வரை கோரை புல் தேக்கமடைந்துள்ளது.இது குறித்து, கோரை உற்பத்தியாளர்கள் சங்க துணை தலைவர் குணசீலன், கூறியதாவது: கோரைக்கு சரியான விலை கிடைக்காததால், ஐம்பது இஞ்ச் கோரை, 1,050 ரூபாய்க்கு குறைவாக விற்பதில்லை, என முடிவு செய்தோம். அதன்படி, கடந்த, 14ம் தேதியில் இருந்து கோரை விற்கவில்லை. இதன் காரணமாக, ஒவ்வொரு வயல்களிலும், 30 முதல், 40 கட்டு கோரை தேக்கமடைந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் இருந்து தினசரி, 20 லோடு முதல், 30 லோடு கோரை வெளிமாவட்டங்களுக்கு செல்லும் விவசாயிகள்

கோரை விற்காததால், 100 லோடு கோரை தேக்கமடைந்துள்ளது. வியாபாரிகள் சங்கத்தினர் இன்று (நேற்று) இரவு, நாளை ( இன்று) கூட்டம் நடத்தி, முடிவு செய்கின்றனர். அதை தொடர்ந்து கோரையை விவசாயிகள் விற்க முடிவு செய்வர். இவ்வாறு, அவர் கூறினார்.

**காய்கறிகள் சேகரிப்பு:மையக் கட்டடம் திறப்பு**

பழநி: பழநி -திண்டுக்கல் ரோட்டில் வேளாண் விற்பனை கூட வளாகத்தில் புதிதாக ரூ.36 லட்சம் மதிப்பீட்டில் காய்கறிகள் சேகரிப்பு, தரம்பிரிப்பு மையக்கட்டடம் கட்டப்பட்டது.

இதில் பல்வேறு பகுதிகளிலிருந்து விவசாயிகள் கொண்டுவரும் 30 டன் காய்கறிகளை விவசாயக்குழுக்கள் மூலம் சேகரித்து தரம்பிரித்து விற்பனை செய்யலாம். இதைப்போலவே ரூ.59 லட்சம் செலவில் மின்னணு ஏலமுறை மக்காச்சோள விற்பனை மைய கட்டடமும் திறக்கப்பட்டுள்ளது. இதனை முதல்வர் ஜெயலலிதா வீடியோகான்பரன்சிங் முறையில் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர் முரளி உட்பட பலர் பங்கேற்றனர். திண்டுக்கல் விற்பனை குழு செயலாளர் சையது இப்ராஹிம், கூறுகையில்,"" வேளாண் விற்பனை, வணிகதுறை சார்பில் மாவட்டத்தில் மொத்தம் 70 விலைபொருள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. பழநியில் மட்டும் 23 குழுக்கள் உள்ளது. ஒருவிவசாயி 200கிலோ காய்கறியை ஒட்டன்சத்திரத்திற்கு கொண்டு செல்லும்போது அவர் எதிர்பார்த்த விலை கிடைக்காது. அதுவே மொத்தமாக விவசாயிகளிடம் சேகரித்து, தரம்பிரித்து விலைநிர்ணயம் செய்து ஒட்டன்சத்திரம் மார்க்கெட் அனுப்பினால் விவசாயிகளுக்கு மூன்று மடங்கு லாபம் கிடைக்கும்,"என்றார்.

**3 பாசன வாய்க்கால்களுக்குவரதமாநதி அணை தண்ணீர்**

பழநி:பழநி வரதமாநதி அணையிலிருந்து நிரம்பி வெளியேறும் தண்ணீரை மூன்று பாசன வாய்க்கால் விவசாயிகள் முதல்போக சாகுபடிக்கு பயன்படுத்தும் வகையில் 120 நாட்கள் வழங்கப்பட உள்ளது. பழநி வரதமாநதி அணை கடந்த ஒருமாதமாக நிரம்பி வழிந்து உபரிநீர் வெளியேற்றப்படுகிறது. இதன் மூலம் குளங்கள், கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. விவசாயப் பாசனத்திற்காக அந்த தண்ணீரை வழங்க பொதுப்பணித்துறையினர் முடிவுசெய்து வினாடிக்கு 15 கனஅடி தண்ணீரை ஆயக்குடி பாப்பன்குளம், பெரியவாய்க்கால், கோதைஆயக்கட்டு முதல்போக நெல்சாகுபடி பாசனத்திற்காக வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிட்டுள்ளனர். இதன்மூலம் இவ்வாண்டு பல ஏக்கர் பரப்பிலான விவசாயிகள் பயன்பெற உள்ளனர். பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""கோடைகாலத்திலும் நிரம்பி வழியும் வரதமாநதி அணை தண்ணீரை, இவ்வாண்டு முதல்போக சாகுபடி தயாராகிவரும் மூன்று பாசனவாய்க்கால் விவசாயிகள் தேவைக்காக நேற்றுமுன்தினம் முதல் தொடர்ந்து 120 நாட்கள் தண்ணீர் வழங்கஉள்ளோம்.," என்றார்.

**நடவு பணிகளுக்காகதயாராகும் நெல் வயல்கள்**

கூடலூர்:கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல் போக நெல் சாகுபடிக்காக, பெரியாறு அணையில் இம்மாதம் 2ல் திறக்கப்பட்டது. அப்போது அணையின் நீர்மட்டம் 117 அடியாக இருந்தது. நீர்திறப்பை தொடர்ந்து, நாற்றாங்கால் அமைத்து நெல் நாற்றுகள் பாவும் பணியில் கடந்த சில தினங்களாக விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.தற்போது நாற்றுகள் வளர்ந்துள்ள நிலையில், அதனை வயல்களில் நடுவதற்காக, வயல்களை உழுது தயார் படுத்தும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்கவும், குறைந்த

பராமரிப்பில் கூடுதல் பலன் எடுக்கவும், திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்ய விவசாயிகள் முன்வரவேண்டும், என விவசாயத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**நெல்லை, தூத்துக்குடி கார் சாகுபடி; பாபநாசம் அணை நீர் திறப்பு**

திருநெல்வேலி : நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களின் பாசனத்திற்காக பாபநாசம் அணையை கலெக்டர் திறந்து வைத்தார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் ஆண்டுதோறும் ஜூன் முதல் தேதி கார் பருவ நெல் சாகுபடிக்காக பாபநாசம் அணை நீர் திறந்து விடுவது வழக்கம். கடந்த சில ஆண்டுகளாக சில தினங்கள் தாமதமாக தண்ணீர் திறக்கப்படுகிறது. நேற்று மாலையில் கலெக்டர் மு.கருணாகரன் பாபநாசம் அணை ஷட்டரை திறந்து வைத்தார். அவர் கூறியதாவது: அணையில் தற்போது 71.90 அடியாக நீர்மட்டம் உள்ளது. நெல்லை மாவட்டத்தில் வடக்குகோடைமேலழகியான், தெற்கு கோடைமேலழகியான், நதியுன்னி, கன்னடியன், கோடகன் கால், திருநெல்வேலி கால், பாளையங்கால், தூத்துக்குடி மாவட்டத்தின் மருதூர் அணையின் கால்வாய்கள் என மொத்தம் 11 கால்வாய்களின் மூலம் மொத்தம் 38 ஆயிரத்து 434 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. அணைக்கு வினாடிக்கு 504 கனஅடி வீதம் தண்ணீர் வருகிறது. அணையில் இருந்து வினாடிக்கு 700 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நேற்று துவங்கி அக்டோபர் 31ம் தேதி வரை மொத்தம் 138 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகளின் நீர்இருப்பை கொண்டு தண்ணீர் வெளியேற்றப்படும் அளவு அதிகரிக்கவோ குறைக்கவோ வாய்ப்புள்ளது. விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார்

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## நெல்லுக்கான ஆதரவு விலை உயருமா? மத்திய அரசு இன்று ஆலோசனை

பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு புதன்கிழமை (ஜூன் 17) ஆலோசனை நடத்தவுள்ளது. இதில், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையில் குவிண்டாலுக்கு ரூ.50 உயர்த்தி வழங்க ஒப்புதல் அளிக்கப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. தற்போது நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 1,360 வழங்கப்பட்டுவருகிறது. இதுகுறித்து மத்திய வேளாண்துறை செயலாளர் சிராஜ் ஹுசைன் கூறுகையில், "பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு புதன்கிழமை கூடுகிறது; இதில் விவாதிக்கப்பட வேண்டிய பட்டியலில் நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணய விவகாரமும் இடம்பெற்றுள்ளது' என்றார். காரீஃப் (கோடை) பருவத்தில், நெல் உள்ளிட்ட பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவது குறித்து "விவசாயப் பொருள்களுக்கான விலை நிரணய ஆணையம்' (சிஏசிபி) அளித்த பரிந்துரையை அமைச்சரவைக் குழுவின் ஆலோசனைக்கு வேளாண்அமைச்சகம் அனுப்பி வைத்தது.இதில், நெல்லுக்கான ஆதரவு விலையில் குவிண்டாலுக்கு ரூ.50 கூடுதலாக வழங்க பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதேபோல், ஒரு குவிண்டால் கேழ்வரகின் குறைந்தபட்ச ஆதரவு விலையில் ரூ.100 உயர்த்தி 1,650 ரூபாயாக வழங்க

பரிந்துரைக்கப்பட்டுள்ளது. நிலக்கடலையின் விலையில் குவிண்டாலுக்கு ரூ.30 உயர்த்தி 4,030 ரூபாயாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பருப்பு இறக்குமதியைக் குறைத்து, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கும் வகையில், அதற்கான உத்தேச விலையை அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னதாக, உற்பத்தி விலையில் பாதியை குறைந்தபட்ச ஆதரவு விலையாக கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மக்களவை தேர்தலின்போது பாஜக வாஹக்குறுதி அளித்திருந்தது. அதே வேளையில், வேளாண் பொருள் விலை நிர்ணய ஆணையத்தின் பரிந்துரைக்கு அமைச்சரவை ஒப்புதல் அளிப்பதே வழக்கத்தில் உள்ளது. இந்நிலையில், புதன்கிழமை கூடவுள்ள அமைச்சரவைக் குழு, ஆணையத்தின் பரிந்துரையை ஏற்குமா அல்லது பாஜகவின் வாக்குறுதியை நிறைவேற்ற வழிவகை செய்யுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## அருவிகளில் குறைந்த அளவில் தண்ணீர்: குற்றாலத்தில் விரைவில் சீசன் தொடங்கும்!

குற்றாலம் பகுதியில் பெய்த மிதமான சாரல் மழை காரணமாக பேரருவி, ஐந்தருவியில் செவ்வாய்க்கிழமை குறைந்த அளவில் தண்ணீர் விழுந்தது. மேலும், இதமான சூழலும் காணப்படுவதால், விரைவில் சீசன் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கமாக மே மாத இறுதி அல்லது ஜூன் மாத தொடக்கத்தில் குற்றால அருவிகளில் தண்ணீர் விழத் தொடங்கிவிடும். ஆனால், நிகழாண்டில் சீசன் தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, செவ்வாய்க்கிழமை அதிகாலை குற்றாலம், ஐந்தருவி உள்ளிட்ட பகுதிகளில் மிதமான சாரல் மழை பெய்தது. இதையடுத்து, பேரருவியில் குறைந்த அளவில் தண்ணீர் விழுந்தது. அதேபோல, ஐந்தருவியிலும் மிகக்குறைந்த அளவில் தண்ணீர் விழுந்தது. இதில்,

சுற்றுலாப் பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர். குற்றாலம் பகுதியில் காலை முதலே அவ்வப்போது மேகமூட்டமும், குளிர்ந்த காற்றும், மிதமான சாரலும் நிலவியது. இதனால், சீசன் விரைவில் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வெப்பச் சலனம் காரணமாக தமிழகம்,** புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: தென்மேற்கு பருவமழையால் ஆந்திரம், கர்நாடகம், தெலங்கானா ஆகிய இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. கேரளத்திலும் பரவலாக மழை பெய்து வருகிறது. தமிழகத்தில் வெப்பச் சலனம் காரணமாக, கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. கடந்த 24 மணி நேரத்தில் தேனி மாவட்டம் பெரியாறில் 30 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், தக்கலை, மயிலாடி ஆகிய இடங்களில் தலா 10 மி.மீ மழை பதிவானது. தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம்மேகமூட்டத்துடன் காணப்படும்.நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 99, 82டிகிரி ஃபாரன்ஹீட் ஆக இருக்கும்.மாலையில் திரண்ட கருமேகம்...: சென்னை மாநகரில், செவ்வாய்க்கிழமை மாலையில் திடீரென குளிர்ந்த காற்றுடன் கூடிய கரு மேகங்கள் கூடின. இதையடுத்து தியாகராய நகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், சேத்துப்பட்டு உள்ளிட்ட மாநகரின் சில பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

## ஜூன் 19-இல் விவசாயிகள்  குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமையில் வருகிற 19-ஆம் தேதி நடைபெறவுள்ளது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 19-ஆம் தேதி காலை 11 மணியளவில், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப் பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை, வணிகத் துறை, இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.எனவே, மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம் என்று அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பல்லடம் பகுதியில் எள் விலை வீழ்ச்சி

பல்லடம் பகுதியில் எள் விளைச்சல் அதிகரிப்பால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

கோடை கால பயிரான எள் மாசி, பங்குனி மாதங்களில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சில ஆண்டுகளாக போதிய மழையின்றி நிலத்தடி நீர் மட்டம் குறைந்ததால், விவசாயிகள் எள் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை. நடப்பாண்டு பங்குனி மாதத்தில் நல்ல மழை பெய்ததால், விவசாயிகள் மானாவாரி நிலங்களில் எள் சாகுபடி செய்தனர். இந்தப் பயிர் தற்போது அறுவடைக்கு வந்துள்ளது.

வழக்கத்துக்கு மாறாக எள் சாகுபடி பரப்பு கூடியதால், எள் விளைச்சல் அதிகரித்துள்ளது.

இதனால் எள் விலை வீழ்ச்சி அடைந்தது. அறுவடைக்கு முன் கிலோ ரூ. 100ஆக இருந்த எள், தற்போது கிலோ ரூ. 50 ஆக குறைந்துள்ளது. எண்ணெய் ஆலைகள், குறைந்த விலைக்கு தான் எள்ளை கொள்முதல் செய்கின்றன. 3 மாதங்களுக்கு முன்பு இருந்த விலை தற்போது பாதியாக குறைந்து இருப்பது விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது: விதை எள் வாங்கும்போது, கிலோ ரூ. 130 ஆக இருந்தது. தற்போது எள் அறுவடை செய்யப்பட்டு விற்பனை செய்யும்போது மிக குறைந்த விலைக்கு வாங்கப்படுகிறது. அறுவடை, விதைப்பு கூலி அதிகரித்துள்ள நிலையில், எள் விலை வீழ்ச்சி அடைந்துவிட்டது கவலை அளிக்கிறது என்றனர்.

### விற்பனைக் கூடத்தில் ரூ.10 லட்சத்துக்கு வர்த்தகம்

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 10.71 லட்சத்துக்கு தேங்காய் மற்றும் கொப்பரை வர்த்தகம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 266 மூட்டைகளில் 10 டன் எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 81.35-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 77.95-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 68.05-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 56.15-க்கும் என மொத்தம் ரூ. 7 லட்சத்து 74 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

அதேபோல, 13 ஆயிரத்து 988 கிலோ எடையுள்ள 41 ஆயிரத்து 574 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்சமாக டன் ரூ. 24 ஆயிரத்து 400-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 17 ஆயிரத்து 798-க்கும் என ரூ. 2 லட்சத்து 97 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதில், மொத்தம் ரூ. 10 லட்சத்து 71 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது.

### நீலகிரியில் 7-ஆவது தேயிலைப் பூங்கா திறப்பு

உதகையில் தோட்டக்கலைத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள 7-ஆவது தேயிலைப் பூங்காவை காணொலி மூலமாக முதல்வர் ஜெயலலிதா செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

நீலகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில், ஏற்கெனவே உதகையில் அரசினர் தாவரவியல் பூங்கா, அரசினர் ரோஜா பூங்கா, மரவியல் பூங்கா, குன்னூரில் சிம்ஸ் பூங்கா, காட்டேரி பூங்கா, கோத்தகிரியில் நேரு பூங்கா ஆகிய 6 பூங்காக்கள் உள்ளன. தற்போது, புதிதாக கோத்தகிரி சாலையில் தேயிலைப் பூங்காவும், கூடலூரில் வண்ணத்துப்பூச்சி பூங்காவும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பூங்காக்களையும் தமிழக முதல்வர் ஜெயலலிதா காணொலி மூலமாக திறந்து வைத்தார்.

தொடர்ந்து, உதகையிலுள்ள தேயிலைப் பூங்காவை ஆட்சியர் பி.சங்கர் அதிகாரிகளுடன் பார்வையிட்டு, நுழைவுச் சீட்டு விற்பனையை தொடங்கி வைத்தார். இதில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் சீனிவாசரெட்டி, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தொட்டபெட்டாவில் அமைக்கப்பட்டுள்ள தேயிலைப் பூங்கா தோட்டக்கலைத் துறையின் தொட்டபெட்டா பண்ணையில் அமைந்துள்ளது. உதகை நகரிலிருந்து கோத்தகிரி செல்லும் சாலையில் 5

கி.மீ. தொலைவில், தொட்டபெட்டா மலைச் சிகரத்துக்கு அருகில் அமைந்துள்ள இப்பூங்கா 10 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியுதவியுடன் ரூ. 80 லட்சம் செலவில் இப்பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் சுற்றுலாப் பயணிகள் தேயிலைத் தோட்டங்களின் வழியாக நடைப் பயணம் மேற்கொள்ளும்போது, தேயிலையின் வரலாற்றை அறிந்து கொள்ளும் வகையில் தகவல் பலகைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தேயிலைப் பூங்காவின் இயற்கை அழகையும், கர்நாடக மாநிலத்தின் அழகையும் கண்டு ரசிக்கும் வகையில் 3 இடங்களில் நிழற்குடைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகள் விளையாட்டு உபகரணங்களும், தேயிலை உற்பத்தியைப் பார்வையாளர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தேயிலை தயாரிப்பு இயந்திரங்களின் மாதிரி வடிவமைப்பும் நிறுவப்பட்டுள்ளன. குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளுடன் வாகன நிறுத்துமிடமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவுக்குள் தினசரி காலை 9 முதல் மாலை 5 மணி வரை பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுவர். பெரியவர்களுக்கு ரூ. 15-ம், சிறியவர்களுக்கு ரூ.10-ம் நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்படும்.

### 19-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை (ஜூன்19) மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெறுகிறது.

ஆட்சியர் அலுவலகத்தின் 5-ஆவது தளத்தில் காலை 11 மணியளவில் தொடங்கும் இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் இரா.நந்தகோபால் தலைமை தாங்குகிறார். அனைத்துத் துறை அலுவலர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

மாவட்ட விவசாயிகள் நேரடியாக அல்லது மனுக்கள் மூலமாக ஆட்சியரிடம் முறையிடலாம் என ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

**வேளாண் பரிவர்த்தனை கூடம் திறப்பு**

ஆரணி ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தினுள் ரூ. 43 லட்சம் மதிப்பில் வேளாண் வணிகத் துறை பரிவர்த்தனைக் கூடத்தை காணொலிக் காட்சி முறையில் முதல்வர் ஜெயலலிதா செவ்வாய்கிழமை திறந்து வைத்தார்.இதையடுத்து பரிவர்த்தனைக் கூடத்தில் வைகை கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.ஜோதிலிங்கம் குத்துவிளக்கு ஏற்றி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினார்.நிகழ்ச்சியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, இளநிலை உதவியாளர் ரவிச்சந்திரன், செயலாளர் சீனிவாசன், நகரமன்ற உறுப்பினர்கள் அன்புஇளங்கோ, ரவி, எஸ்.எம்.ஜி.பாலு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெம்பாக்கம் வட்டார விவசாயிகள் கவனத்துக்கு...**

வெம்பாக்கம் வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெறும் வகையில் இடுபொருள்கள், உயிரி உரம் நுண்ணூட்டச் சத்து, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் மானிய விலையில் வழங்கப்படுகின்றன என்று வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன் தெரிவித்தார்.இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் வெம்பாக்கம் வட்டத்தில் சிறுதானியங்கள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஒரு ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் வீதம் மானியத்தில் விவசாயிகளுக்கு சிறுதானிய இடுபொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

மேலும் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்சுழற்சி முறையாக மணிலா, பயறு வகைகளுக்குத் தேவையான உயிர் உரம் நுண்ணுட்டச் சத்து பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் ஆகியவை ஒரு ஏக்கருக்கு ரூ.7 ஆயிரம என்ற அளவில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய தயார் நிலையில் இருப்பு உள்ளது.தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறுவகைகள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக ஜிப்சம் 50 சதவீதம் மானியத்தில் விநியோகிப்பதற்கு, அனைத்து வெம்பாக்கம் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் போதுமான அளவு இருப்பு உள்ளது.இதனை விவசாயிகள் பயன்படுத்திப் பயன் அடையலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை பரிசோதனை அவசியம்: வேளாண்மைத்துறை அறிவுறுத்தல்

நீலகிரியில் விவசாயத்துக்கு விதை பரிசோதனை அவசியம் என வேளாண்மைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக உதகை விதை பரிசோதனை நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: நீலகிரியில் உருளைக்கிழங்கு, கேரட், முட்டைக்கோஸ், பீன்ஸ் போன்ற மலைக்காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. பருவமழையை எதிர்நோக்கி தங்கள் தோட்டங்களை சீர்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இதில் மலைக்காய்கறி விதைகளின் முளைப்புத்தன்மை, புறத்தூய்மையை ஆய்வு செய்து, அதன் பின்னரே பயிரிட வேண்டும்.

பட்டாணி, பீன்ஸ் விதைகளின் முளைப்புத்திறன் 74 சதவீதம் இருக்க வேண்டும். அதேபோல, முட்டைக்கோஸ், முள்ளங்கி, டர்னிப்

விதைகளில் முளைப்புத்திறன் 96 சதவீதமும், காலிபிளவர் மற்றும் புரொக்கொலியில் 65 சதவீதமும், கேரட்டில் 60 சதவீதமும் முளைப்புத் திறன் இருக்க வேண்டும்.

விதைப் பரிசோதனை முடிவுகள் 7 நாள்களுக்குள் அவரவர் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். விதை பரிசோதனைக்கு கட்டணமாக ரூ.30 மட்டும் வசூலிக்கப்படும். எனவே, நீலகிரி விவசாயிகள் விதைகளை பரிசோதனை செய்த பின்னரே பயிர் செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அயோடின் உப்பு பயன்பாடு குறித்து விழிப்புணர்வுப் பயிற்சி

தருமபுரியில் அயோடின் உப்பு பயன்பாடு குறித்த விழிப்புணர்வுப் பயிற்சி வகுப்பு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம், யுனிசெப் இணைந்து நடத்திய பயிற்சி வகுப்பை தொடக்கி வைத்த ஆட்சியர் கே.விவேகானந்தன் பேசியது:

அயோடின் உப்பின் அவசியத்தை பொதுமக்கள் உணரும் வகையில் மாவட்டம் முழுவதிலும் வாசகங்கள் அச்சிடப்பட்டு விளம்பரப்படுத்த வேண்டும். இரும்பு, அயோடின் சத்து கலந்த உப்பு ரத்தசோகை, குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்றது. குறைந்த அளவு சோடியம் கலந்த உப்பு இதய நோய், ரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு இன்றியமையாததாகும். அயோடின் உப்பின் அவசியம் குறித்த விழிப்புணர்வை கிராமப்புறப் பெண்களிடம் ஏற்படுத்த மகளிர் திட்டம், புதுவாழ்வு ஆகியவற்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் ஆட்சியர்.

முன்னதாக, அயோடின் உப்பின் முக்கியத்துவம் குறித்த பயிற்சிக் கையேடு வெளியிடப்பட்டது.

திட்ட இயக்குநர் ஸ்ரீதர், கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் ரேணுகா, மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் க.பாண்டியன், மாவட்ட வழங்கல் அலுவலர் பிச்சைராமன், ஊராட்சிகள் உதவி இயக்குநர் எஸ் பழனிச்சாமி, புதுவாழ்வு திட்ட இயக்குநர் நாராயணன், மகளிர் திட்ட அலுவலர் ரேவதி, யுனிசெப் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மனோகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தம்மம்பட்டி பகுதியில் கன மழை**

சேலம் மாவட்டத்தில் தம்மம்பட்டி, கெங்கவல்லி, சுற்றுவட்டாரப் பகுதிகளில் செவ்வாய்க்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.

மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை தொடர்ந்து பலத்த காற்றுடன் சுமார் 2 மணி நேரம் மழை பெய்தது. இதனால், சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. இதையடுத்து, வெப்பம் தணிந்து குளிர்ந்த காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைக்க 29 விவசாயிகளுக்கு தலா ரூ.3.84 லட்சம் மானியம் அளிப்பு**

சேலம் மாவட்டத்தில் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைக்க 29 விவசாயிகளுக்கு அரசு மானியமாக தலா ரூ.3.84 லட்சம் வழங்கப்பட்டது.

சேலம் மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம், நீர்வள, நிலவள திட்டம், சூரிய சக்தி பம்பு செட்டுகள் வழங்கும் திட்டம் குறித்து செவ்வாய்க்

கிழமை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

ஏ.கொமாரபாளையம் கிராமத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 4 ஹெக்டர் பரப்பளவில் ரூ.76,600 மானியத்தில் பயிர் செய்யப்பட்ட எண்ணெய்ப் பனைத் தோட்டம், மலையாளப்பட்டியில் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ் பெத்தநாயக்கன்பாளையம் சாமை

சாகுபடி விவசாய குழுவுக்கு ரூ.2.04 லட்சம் மானியத்துடன் வழங்கப்பட்ட சிறுதானிய, கல், உமி நீக்கும் இயந்திரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், பகுடுபட்டு பகுதியில் ரூ.3.84 லட்சம் மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி பம்புசெட்டுகள் குறித்து பெத்தநாயக்கன்பாளையம் வேளாண்மை உதவி இயக்குநர் விநாயகமூர்த்தி விளக்கினார்.

இதில், துணை வேளாண்மை அலுவலர் அன்பழகன் (பெத்தநாயக்கன்பாளையம்), வேளாண்மை அலுவலர் நாகராஜன், துணை வேளாண்மை அலுவலர் ஜோஸ்வாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டங்கள் குறித்து ஆட்சியர் க.மகரபூஷணம் கூறியது:

நீர்வள, நிலவளத் திட்டம் - உலக வங்கியின் நிதி உதவியுடன் சேலம் மாவட்டத்தில் மேல் வெள்ளார், சுவேதா உப வடிநிலப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகிறது.

மேல் வெள்ளார் உப வடிநிலப்பகுதியில் 2014 -15 ஆம் ஆண்டு பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் சாமை சாகுபடியாளர் குழுவுக்கு சிறுதானியங்கள் சுத்திகரிப்பு இயந்திரம் 100 சத மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. மானியத் தொகை ரூ.2.04 லட்சம் ஆகும். சேலம் மாவட்டத்திற்கு மொத்தமாக 6 இயந்திரங்கள் ரூ.12.25 லட்சம் மானியத்தில் வழங்கப்
பட்டுள்ளன.

மேலும், 2014- 15-ஆம் ஆண்டில் சூரிய சக்தியால் இயங்கும்
பம்பு செட்டுகள் அமைத்திட 29 எண்கள் இலக்காகப் பெறப்பட்டு முழுமையாக சாதனை அடையப்பட்டது.

இத்திட்டத்தில் 5 குதிரை திறன் கொண்ட பம்பு செட்டுகள் வழங்கப்பட்டன. மொத்த விலையான ஒரு எண்ணிற்கு ரூ.5,01,512-இல்அரசு மானியமாக ரூ.3.84 லட்சம் வழங்கப்பட்டது.பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் 5 சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவிட பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதன் மானிய மதிப்பு ரூ.19.20 லட்சமாகும். சூரிய சக்தி பம்பு செட்டுகளை அமைக்க விவசாயிகள் முன்வர வேண்டும் என்றார்.

**புதுகை விவசாயிகளுக்கு ரூ. 118 கோடி இழப்பீடு**

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2013-14-ல் பயிர்க் காப்பீடு செய்து சம்பா பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு, தேசிய வேளாண் பயிர் காப்பீட்டு நிறுவனம் ரூ.118 கோடி இழப்பீடு வழங்கியுள்ளது.

இதுகுறித்து புதுக்கோட்டை கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் கே.வி.எஸ். குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாவட்டம் முழுதும் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் இழப்பீடுத் தொகை வழங்கப்படுகிறது. தகுதியுள்ள விவசாயிகள் தங்களுக்கு தொடர்புள்ள வேளாண் கூட்டுறவுச் சங்கங்களைத் தொடர்பு கொண்டு இழப்பீடு பெறலாம்.

இழப்பீடு பெறுவதில் இடர்பாடுகள் இருப்பின், அறந்தாங்கி துணைப் பதிவாளரை 81227-52855, புதுக்கோட்டை துணைப்பதிவாளரை 94442-48543, புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியை 94434-11235, புதுக்கோட்டை இணைப்பதிவாளரை 94432-77335 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**300 நெல் நடவு இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன'**

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 300 நெல் நடவு இயந்திரங்கள் உள்ளதால் குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் கட்டணமில்லாமல் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் ஆட்சியர் என். சுப்பையன்.

தஞ்சாவூர் அருகேயுள்ள அள்ளூர் கிராமத்தில் தமிழக அரசின் குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தின் கீழ் கட்டணமில்லா நெல் நடவு இயந்திரம் மூலம் செவ்வாய்க்கிழமை நடவு செய்யப்பட்டு வந்த பணிகளை ஆய்வு செய்த அவர் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது:

தஞ்சாவூர் மாவட்டத்தில் நிகழாண்டில் 80,000 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதில், இதுவரை 18,375 ஏக்கரில் நடவு செய்யப்பட்டுள்ளது.

குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தின் கீழ் குறுவை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டக் கலவைக்காக ஏக்கருக்கு ரூ. 315 வீதம் அவர்களுடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுவிடும்.

களர் உவர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு நிலத்தை சீர் செய்ய விலையில்லா ஜிப்சம் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ வழங்கப்படுகிறது.

பாய் நாற்றங்கால் மூலம் நடவு செய்யவுள்ள விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலம் வாடகை கட்டணமில்லா நடவு இயந்திரம் வழங்கப்படும். தற்போது கும்பகோணம் ஒன்றியத்தில் 40 நடவு இயந்திரங்களும், திருப்பனந்தாள், திருவையாறு ஒன்றியத்தில் தலா 20 இயந்திரங்களும், ஒரத்தநாடு, தஞ்சாவூர், பட்டுக்கோட்டை ஆகிய ஒன்றியங்களில் தலா 10 இயந்திரங்களும், இதர ஒன்றியங்களில் 5 இயந்திரங்களும், தனியாரிடம் நூற்றுக்கும் அதிகமான இயந்திரங்களும் என மொத்தம் சுமார் 300 இயந்திரங்கள் தயார் நிலையில் உள்ளன. இதற்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு

ஏக்கருக்கு ரூ. 2,375 வழங்கப்படுகிறது.

குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மை உதவி அலுவலர் மற்றும் வேளாண்மை உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற்றுப் பயனடையலாம். மேலும், இது தொடர்பான விவரங்களுக்கு தஞ்சாவூர் கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை 04362 - 235168 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் ஆட்சியர்.

அப்போது, வேளாண்மைத் துறை இணை இயக்குநர் ஜெ. சேகர், துணை இயக்குநர்கள் சீனிவாசன், சொக்கலிங்கம், வேளாண் பொறியியல் துறைக் கண்காணிப்புப் பொறியாளர் மணி உடனிருந்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**ஈரோட்டில் பலத்த மழை**



ஈரோடு

ஈரோட்டில் கடந்த சில நாட்களாக நல்ல வெயில் அடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று மாலை 3.30 மணிக்கு வானில் கருமேகங்கள் திரண்டன. இதையடுத்து குளிர்ந்த காற்று வீச தொடங்கியது.

இதனைத்தொடர்ந்து 4.15 மணிக்கு மழை பெய்ய தொடங்கியது. பின்னர் ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை கொட்டி தீர்த்தது. சுமார் ½ மணி நேரம் கொட்டி தீர்த்த இந்த மழையால் ஈரோட்டில் முனிசிபல் காலனி ரோடு, மேட்டூர் ரோடு, பிரப் ரோடு, பெருந்துறை ரோடு, நாச்சியப்பா வீதி, அகில் மேடு வீதி, நேதாஜி ரோடு உள்பட பல இடங்களில் மழைநீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக முனிசிபல் காலனி ரோடு, நாச்சியப்பா வீதி, நேதாஜி ரோடு உள்பட பல இடங்களில் சாக்கடை கால்வாயில் அடைப்பு ஏற்பட்டிருந்ததால் மழைநீருடன் சாக்கடை கழிவு நீரும் கலந்து ரோட்டில் ஓடியது.

இதனால் ரோட்டில் நடந்து சென்றவர்கள் மிகவும் அவதிப்பட்டனர். மழை நின்ற பிறகு சாக்கடை கழிவுகள் ரோட்டில் அப்படியே தேங்கி கிடந்தால் ஒருவித துர்நாற்றம் வீசியது. ஒரு சில கடைக்காரர்கள் தங்கள் கடைகளின் முன் தேங்கி கிடந்த கழிவுகளை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்தனர். இந்த மழையால் ஈரோடு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர்.

## உளுந்து சாகுபடிக்கு விதை பரிசோதனை செய்து கொள்ளலாம் அதிகாரி தகவல்

காஞ்சீபுரம்

காஞ்சீபுரம் விதை பரிசோதனை அதிகாரி பெருமாள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

காஞ்சீபுரம் மாவட்டத்தில் ஆனி, ஆடி மாதம் உளுந்து சாகுபடி செய்வதற்கு ஏற்ற பருவமாகும். உளுந்து விதைகளை பொறுத்தவரையில் முளைப்பு திறன் 75 சதவீதத்துக்கு அதிகமாகவும், ஈரப்பதம் 8 சதவீதத்துக்கு குறைவாகவும் இருப்பது அவசியம். வம்பன் 1,2,3,4,5,6,7 ஆகிய உளுந்து ரகங்களின், தரமான குறைந்தபட்சம் 75 சதவீத முளைப்பு

திறன் கொண்ட விதைகளைப் பயன்படுத்தி 30 செ.மீ.க்கு 10 செ.மீ இடைவெளிவிட்டு விதைக்க வேண்டும். இதை கடைபிடித்தால் 20 சதவீதம் மகசூல் கிடைக்கும், எனவே, விவசாயிகள் தங்களிடமுள்ள விதை 75 சதவீத முளைப்பு திறன் உள்ளதா என உறுதி செய்துகொள்ள 100 கிராம் மாதிரியை விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சீபுரம். என்ற முகவரிக்கு அனுப்பி விவரங்களை பெற்று பயன்பெறலாம். இதற்கு ரூ.30 கட்டணம் வசூலிக்கப்படும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தண்ணீர் பற்றாக்குறையால் முப்போகம் நெல் விளைந்த நிலங்களில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது



தண்ணீர் பற்றாக்குறையால் முப்போகம் நெல் விளைந்த நிலங்களில் சோளம் பயிரிடப்பட்டுள்ளது.முப்போகம்கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி ஆகிய 2 ஆறுகள் ஓடுகிறது. இந்த 2 ஆறுகளில் இருந்து பிரிந்து வாய்க்காலில் வரும் தண்ணீர் மூலம் பல ஆண்டுகளுக்கு முன்பு கரூர் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் முப்போகம் நெல் விளைந்தது. குறிப்பாக காவிரி ஆற்று பாசனம் மூலம் நொய்யல், வேலாயுதம்பாளையம், தோட்டக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகள், அதே போன்று அமராவதி ஆற்றுப்பாசனம் மூலம் அரவக்குறிச்சி, நஞ்சைகாளிக்குறிச்சி, பஞ்சமாதேவி, வாங்கல் உள்ளிட்ட பகுதிகளில்

மூன்று போகம் நெல் விளைந்தது. இந்த நிலையில் காலப்போக்கில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. சோளப்பயிர்மேலும் சாயப்பட்டறை கழிவு நீர் கலந்ததால் நூற்றுக்கணக்கான விவசாய நிலங்கள் பாழாகி விட்டது. இதனால் தற்போது வருடத்திற்கு ஒரு போகம் நெல் எடுத்தால் போதும் என்ற நிலை ஏற்பட்டு உள்ளது. அந்த அளவிற்கு தான் தற்போது ஆறுகளில் தண்ணீர் வருகிறது.

இதனால் தற்போது மாவட்டம் முழுவதும் விவசாயிகள் கிணறுகளில் உள்ள தண்ணீரை பயன்படுத்தி கோடை கால பயிரான சோளம் பயிரிட்டு வருகின்றனர். அதன்படி கரூர் அருகே உள்ள பஞ்சமாதேவி, நெரூர், சோமூர் உள்ளிட்ட பல இடங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் சோளப்பயிர் பயிரிட்டு உள்ளனர். அந்த பயிர் தற்போது நன்கு வளர்ந்து வருகிறது.

இது குறித்து அந்த பகுதியில் உள்ள விவசாயிகளிடம் கேட்ட போது, அமராவதி ஆற்று தண்ணீர் மூலம் விவசாயம் செய்து வருகிறோம். ஆனால் தற்போது அமராவதி ஆற்றில் தண்ணீர் இல்லாததால், கிணற்றில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை பயன்படுத்தி சோளம் பயிரிட்டு உள்ளோம். இந்த சோளப்பயிர்களை 3 மாதத்தில் அறுவடை செய்து விடுவோம். அறுவடை செய்த பயிர்களை மாடுகளுக்கு உணவாக பயன்படுத்துவோம் என்று கூறினர்.

## வேளாண்மை திட்டப்பணிகளை கூடுதல் இயக்குனர் ஆய்வு

தேசிய மண்வள அட்டை இயக்கத்தின் மூலம், ஓசூர் அருகே நல்லூர் கிராமத்தில் வேளாண்மைத்துறை களப்பணியாளர்களால் செய்யப்படும் மண் மாதிரி சேகரிப்பு பணிகளை கூடுதல் இயக்குனர் கருணாகரன் ஆய்வு செய்தார். தொடர்ந்து தேசிய எண்ணெய் வித்து மற்றும் எண்ணெய் பனை இயக்கம் 2014-2015 திட்டத்தின் கீழ், 50 சதவீத

மானியத்தில் விவசாயி சிவக்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட ரோட்டவேட்டர் கருவியின் பயன்பாடு குறித்தும் அவர் ஆய்வு செய்தார். பின்னர், சொக்கநாதபுரம் கிராமத்தில் விவசாயி திம்மா ரெட்டி என்பவரது வயலில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் 2014-2015 ன் கீழ் 80 சதவீத மானியத்தில் வழங்கப்பட்ட சோலார் பம்புசெட்டை கருணாகரன் ஆய்வு செய்து அதன் செயல்பாடு குறித்து விவசாயிடமிருந்து கேட்டறிந்தார்.

மேலும், ஓசூர் வட்டாரத்தில் விவசாயிகளிடம் பிரபலமாக இருக் கும் துவரை நாற்று நடவு தொழில் நுட்பம் குறித்து மல்ல சந்திரம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகளிடம் கலந்துரையாடி, விவசாயி களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இதைத் தொடர்ந்து முகுல பள்ளி கிராமத்தில் அமைந்துள்ள நாற்றங்கால் பண்ணையை பார்வையிட்டு, அதில் நாற்று விடப்பட்டுள்ள துவரை பீஆர்ஜி-1, பீஆர்ஜி-2 மற்றும் பீஆர்ஜி-4 ரக நாற்றுகளை ஆய்வு செய்தார். பின்பு, பி.¢ஜீ.புதூரில் தென்னை நாற்றங்கால் பண்ணையை மற்றும் அகசிப்பள்ளி விதை சுத்திகரிப்பு நிலையங்களிலும் கருணாகரன் ஆய்வு மேற்கொண்டார். இந்த தகவல்களை ஓசூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ராமலிங்கம், வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கூடலூர் பகுதியில் இந்தியன் செர்ரி பழங்கள் விளைச்சல் அதிகரிப்பு



கூடலூர் பகுதியில் இந்தியன் செர்ரி பழங்கள் அதிகளவு விளைந்து உள்ளது.செர்ரி பழங்கள்கூடலூர் பகுதியில் அடர்ந்த வனங்களும்,

இயற்கை எழில் சூழ்ந்த பகுதிகளும் உள்ளன. இதனால் வனப்பகுதியில் அரிய வகை தாவரங்கள், மூலிகைகள் அதிகளவு உள்ளன. இதனால் ஒவ்வொரு காலக்கட்டங்களுக்கு ஏற்ப பழங்கள் விளைகின்றன. இதேபோல் சிறுவன உயிரினங்கள் விரும்பி சாப்பிடக்கூடிய பன்னீர் புரூட், அத்திப்பழங்கள் உள்பட ஏராளமான பழ மரங்களும் காணப்படுகிறது.கூடலூர் நாடுகாணி தாவரவியல் மையம் உள்பட அடர்ந்த வனப்பகுதியில் தற்போது இந்தியன் செர்ரி பழங்கள் அதிகளவு விளைந்து உள்ளது.

வைட்டமின் 'சி'புரூனேஸ் என அழைக்கப்படும் இந்தியன் செர்ரி பழங்கள், இனிப்பு மற்றும் புளிப்பு தன்மை உடையவை. சின்ன நெல்லிக்காய் போன்று காணப்படும் இப்பழங்களை பறவைகள், குரங்குகள் உள்ளிட்ட வனவிலங்குகள் விரும்பி சாப்பிடுகிறது.இதுதவிர மனிதர்களின் உடலுக்கு வைட்டமின் 'சி' உள்ளிட்ட பல்வேறு சத்துக்களை வழங்குகிறது. கூடலூர் வன பகுதியில் ஏராளமான தாவரங்கள் உள்ள நிலையில் ஆண்டுதோறும் காட்டு தீ பரவி வனங்கள் கருகி வருவதால் அரிய வகை தாவரங்கள், மூலிகை செடிகள் கணிசமாக அழிந்து வருவதாக இயற்கை ஆர்வலர்கள் கவலை தெரிவித்து உள்ளனர்.

**ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக நவீன கேமராக்கள் பொருத்தம்**



ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக 8 இடங்களில் நவீன கேமராக்களை பொருத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.தாவரவியல் பூங்கா

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவிற்கு ஆண்டுக்கு சராசரியாக 20 லட்சத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் வருகின்றனர். மேலும் மே மாதத்தில் இங்கு நடத்தப்படும் மலர்கண்காட்சியின் போது தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள்.எனவே சுற்றுலா பயணிகளின் நலன் கருதி இங்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு 2 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டன. ஆனால் இந்த கேமராக்கள் சரியாக செயல்படவில்லை. இதனை தொடர்ந்து அதிநவீன கேமராக்களை பொருத்த தோட்டக்கலை துறை சார்பில் முடிவு செய்யப்பட்டது.நவீன கேமராக்கள் பொருத்தம்

இதற்காக ரூ.1 லட்சத்து 80 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டு 8 இடங்களில் அதிநவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த கேமராக்களின் கட்டுப்பாட்டு அறை பூங்காவில் உள்ள உதவி இயக்குனர் அலுவலகத்தில் திறக்கப்பட்டு உள்ளது.

பூங்கா உதவி இயக்குனர் தனது அறையில் இருந்தபடி பூங்காவிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் நடவடிக்கையை கண்காணிக்க முடியும். மேலும் நுழைவு வாயில் பகுதியில் மட்டும் 2 நவீன கேமராக்கள் பொருத்தப்பட்டு உள்ளன. இந்த கேமராக்கள் விரைவில் செயல்பட தொடங்கும் என்று தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

## ஊட்டி தேயிலை பூங்காவில் சுற்றுலா பயணிகளுக்கு நுழைவு கட்டணமாக ரூ.15 நிர்ணயம் தோட்டக்கலை துறை அதிகாரிகள் தகவல்



ஊட்டி தேயிலை பூங்காவை காண வரும் சுற்றுலா பயணிகளுக்கு நுழைவு கட்டணமாக ரூ.15 நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளதாக தோட்டக்கலை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.தேயிலை பூங்காநீலகிரி மாவட்ட பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தேயிலை விவசாயம் உள்ளது. மேலும், இங்கு வரும் சுற்றுலா பயணிகள் பசுமை தவழும் தேயிலை செடிகளை கண்டு ரசித்து செல்கின்றனர். இந்த நிலையில் நீலகிரி மாவட்ட தோட்டக்கலை துறை சார்பில் சுற்றுலா பயணிகள் தேயிலை குறித்து முழுமையாக தெரிந்து கொள்ளும் வகையில் தேயிலை பூங்கா அமைக்க திட்டமிடப்பட்டது.இதன்படி ஊட்டி- கோத்தகிரி சாலையில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் தேயிலை பூங்கா அமைக்க ரூ.79 லட்சத்து 90 ஆயிரம் நிதி ஒதுக்கப்பட்டது. மொத்தம் 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த தேயிலை பூங்காவில் சுற்றுலா பயணிகளை

கவரும் வகையில் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.தகவல் பலகைஇந்த பூங்காவில் தேயிலை செடியின் நடுவில் நடைபாதை அமைக்கப்பட்டு உள்ளது. இதில் நடந்து சென்றபடி தேயிலை செடிகளை சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கலாம். அப்போது நடைபாதையின் இருபுறமும் இனிமையான இசை ஒலிக்கும். மேலும் நடைபாதை ஓரத்தில் இருக்கைகளும் அமைக்கப்பட்டு உள்ளன. இதுதவிர தேயிலை செடி நீலகிரிக்கு வந்த வரலாறு மற்றும் தேநீர் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள் ஆகியவை குறித்து சுற்றுலா பயணிகள் தெரிந்து கொள்ளும் வகையில் தகவல் பலகைகள் வைக்கப்பட்டு உள்ளன. மேலும் சிறுவர்கள் விளையாடி மகிழ சறுக்கு, ஊஞ்சல், சிறிய ராட்டினம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

திறப்பு

மிகவும் அழகான இந்த பூங்காவை தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா காணொலி காட்சி மூலம் நேற்று திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் இந்த பூங்காவை பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குனர் சீனிவாச ரெட்டி, மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் சிவா, மாவட்ட ஊராட்சி தலைவர் மேனகா, உதவி இயக்குனர்கள் மீராபாய், உமாராணி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இதுகுறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறியதாவது:- ஊட்டியில் கடந்த 1995-ம் ஆண்டு ரோஜா பூங்காவை தமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதா தொடங்கி வைத்தார். இதனை தொடர்ந்து தற்போது தேயிலை பூங்காவை தொடங்கி வைத்து உள்ளார். 10 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த பூங்கா சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்து இழுக்கும் என்று கருதுகிறோம்.மாதிரி தேயிலை தொழிற்சாலை

இங்கு வரும் சுற்றுலா பயணிகள் தேயிலை தூள் தயாரிக்கப்படும் முறை குறித்து தெரிந்து கொள்ளும் வகையில் இங்கு மாதிரி தேயிலை தொழிற்சாலை அமைக்கப்பட்டு உள்ளது. மேலும் குடிநீர் வசதி, கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இந்த பூங்காவிற்கு நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.15-ம், சிறியவர்களுக்கு ரூ.10-ம் நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. இது தவிர வாகன நிறுத்த கட்டணமாக இருசக்கர வாகனங்களுக்கு ரூ.15-ம், 3 சக்கர வாகனங்களுக்கு ரூ.10-ம், வேன்களுக்கு ரூ.70-ம் பஸ்களுக்கு ரூ.100-ம் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.
இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## கூடலூர் அருகே ரூ.20 லட்சம் செலவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா திறப்பு



கூடலூர் அருகே ரூ.20 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட வண்ணத்துப்பூச்சி பூங்கா நேற்று திறக்கப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.பூங்கா அமைக்க கோரிக்கைகூடலூர் சட்டமன்ற தொகுதியில் நீண்ட காலமாக சுற்றுலா பயணிகளை கவருகின்ற வகையில் சுற்றுலா திட்டங்கள் எதுவும்

நிறைவேற்றப்படவில்லை. இதனால் கூடலூர் தொகுதி மிகவும் பின்தங்கியே காணப்படுகிறது.எனவே, கூடலூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பூங்கா அமைக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர். இதையொட்டி தமிழக அரசு ரூ.20 லட்சம் நிதி ஒதுக்கி தோட்டக்கலைத்துறை சார்பில் கூடலூர் அருகே பொன்னூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்க உத்தரவிட்டது.மலர் செடிகள் நடவு இதைத்தொடர்ந்து கடந்த சில மாதங்களுக்கு முன்பு அரசு தோட்டக்கலை பண்ணையில் 25 சென்ட் நிலத்தில் வண்ணத்துப்பூச்சி பூங்கா அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. இதற்காக பாலித்தீன் கொண்டு மூடப்பட்ட 2 குடில்கள் அமைக்கப்பட்டன. மேலும் வண்ணத்துப்பூச்சிகளுக்கு விருப்பமான ஜனியா, சூரியகாந்தி, அஜிரேட்டம், வெர்பினா, சப்னேரியா குரோட்டேரியா, மொட்டு ரோஜா, சால்வியா உள்பட பலரக மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன.மேலும் வண்ணத்துப்பூச்சிகள் உள்ள குடில்களில் சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கும் வகையிலும், வண்ணத்துப்பூச்சிகளுக்கு தேவையான காலநிலை நிலவுகின்ற வகையில் 2 செயற்கை நீரூற்றுகள் மற்றும் புல்வெளி தளங்கள் அமைக்கப்பட்டன. தற்போது இப்பணிகள் முழுவதுமாக நிறைவு பெற்று சுற்றுலா பயணிகள் பயன்பாட்டுக்கு விட தயாராக வைக்கப்பட்டு இருந்தன.பூங்கா திறக்கப்பட்டதுஇதனை விரைவாக திறக்க வேண்டும் என கூடலூர் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதை ஏற்று தமிழக முதல்- அமைச்சர் ஜெயலலிதா நேற்று பகல் 12 மணியளவில் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் கூடலூர் அரசு தோட்டக்கலை பண்ணையில் அமைக்கப்பட்டு உள்ள வண்ணத்துப்பூச்சி பூங்காவை திறந்து

வைத்தார்.கூடலூர் அருகே வண்ணத்துப்பூச்சி பூங்கா திறக்கப்பட்டதால் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## குன்னூர் உழவர் சந்தை அருகே ரூ.50 லட்சம் செலவில் பூங்கா அமைக்கும் பணி தீவிரம் நகரமன்ற தலைவர் ஆய்வு



குன்னூர் உழவர் சந்தை அருகே ரூ.50 லட்சம் செலவில் பூங்கா அமைக்கும் பணி தற்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதனை நகரமன்ற தலைவர் சரவணக்குமார் நேற்று ஆய்வு செய்தார்.

<u>ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு</u>

குன்னூர் நகராட்சி மூலமாக பல்வேறு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் குன்னூர் உழவர் சந்தை அருகே பொதுமக்களின் நன்மைக்காக பூங்கா அமைக்க வேண்டும் என்று சமூக நல ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதனை தொடர்ந்து 8–வது வார்டு கவுன்சிலர் சையது முபாரக் நகரமன்ற கூட்டத்தில் இதுகுறித்து தீர்மானம் கொண்டு வந்தார். இந்த நிலையில் குன்னூர் உழவர் சந்தை அருகே சுமார் 2 ஏக்கரில் பூங்கா அமைக்க ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

பூங்கா அமைக்கும் பணி தீவிரம்

இதையடுத்து, பூங்கா அமைக்கும் பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதனை குன்னூர் நகரமன்ற தலைவர் சரவணக்குமார், கவுன்சிலர் சையது முபாரக் மற்றும் நகராட்சி அதிகாரிகள் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். இதுகுறித்து குன்னூர் நகரமன்ற தலைவர் சரவணக்குமார் கூறியதாவது:–

குன்னூர் உழவர் சந்தை அருகே பூக்கா அமைக்கும் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு உள்ளன. இதற்காக மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் மூலம் ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது. இந்த பூங்காவில் பல்வேறு வண்ணங்களில் மலரும் பூக்கள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்படும். மேலும், பூங்காவின் அருகே இளைஞர்களின் வசதிக்காக விளையாட்டு மைதானமும் அமைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## குறுவை சாகுபடிக்கு எந்திரங்கள் மூலம் இலவச நடவுப்பணி கலெக்டர் பார்வையிட்டார்



தமிழக அரசின் சிறப்பு தொகுப்பு திட்டத்தின் மூலம் குறுவை சாகுபடிக்கு எந்திரங்கள் மூலம் இலவச நடவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.இதனை கலெக்டர்சுப்பையன் நேரில்பார்வையிட்டார். குறுவை சாகுபடிதமிழகத்தின் நெற்களஞ்சியமான தஞ்சை மாவட்டத்தில் தற்போது குறுவை சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு மேட்டூர் அணையில் இருந்து வழக்கமாக பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் நாளான ஜூன் 12-ந்தேதி தண்ணீர் திறக்கப்படவில்லை. இதையடுத்து குறுவை சாகுபடி பணிகள் தற்போது ஆழ்குழாய் கிணறு பாசனங் கள் மூலம் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் தமிழக அரசு குறுவை சாகுபடி பணி களை மேற்கொள்ள சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் மற்றும் உதவிகளை வழங்கி வருகிறது. அதன்படி தற்போது குறுவை நடவுப் பணிகளை எந்திரம் மூலம் இலவசமாக நடவு மேற் கொள்ள உத்தரவிட்டு அதன் படி நடவுப்பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.எந்திரம் மூலம் நடவுதஞ்சையை அடுத்த அல்லூர் பகுதியில் தமிழக அரசின் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் இலவசமாக நடவுப்பணிகள் மேற் கொள்ளப்படுவதை தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் நேரில் சென்று நேற்று பார்வையிட்டார். பின்னர் கலெக்டர் சுப்பையன் நிருபர்களிடம் கூறிய தாவது:-தஞ்சை மாவட்டத்தில் வழக்கமாக 1 லட்சம் ஏக்கர் பரப்பளவில் குறுவை சாகுபடி நடைபெறும். இந்த ஆண்டு 80 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி செய்ய திட்டமிடப் பட்டு இதுவரை 18 ஆயிரத்து 375 ஏக்கர் பரப்பளவில் நடவு செய்யப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் 12 ஆயிரம் ஏக்கரும், ஜூலை மாதம் 49 ஆயிரத்து 625 ஏக்கரும் நடவு செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.சிறப்பு தொகுப்பு திட்டம்இந்த நிலையில் முதல்-அமைச்சர் ஜெயலலிதா, குறுவை சாகுபடியை ஊக்கு விப்பதற்காக குறுவை சாகுபடி தொகுப்பு திட்டத்தை அறிவித் துள்ளார். அதன்படி குறுவை சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளுக்கும் உற்பத்தி பெருக்கும் காரணிகளான விலையில்லா உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டக் கலவை பயன் படுத்தியமைக்கு ஏக்கருக்கு ரூ.315 வழங்கப் படுகிறது. பாய் நாற்றங்கால் அமைத்து நடவு செய்ய உள்ள விவசாயி

களுக்கு விலையில்லா எந்திர நடவு வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அதற்கு விவசாயிகள் எந்த கட்டணமும் செலுத்த தேவை இல்லை. கட்டணம் இல்லா மல் நடவு எந்திரம் மூலம் நடவு செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மைத்துறை அலுவலகங்களிலோ அல்லது வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களிலோ விண்ணப்பங்களை தங்கள் வயல் விவரம் குறிப்பிட்டு அளிக்க வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங் களை ஒருங்கிணைத்து அந்த பகுதி வேளாண்மை பொறி யியல் துறை உதவி செயற்பொறி யாளர்கள் மூலம் நெல் நடவு எந்திரம் ஒதுக்கீடு செய்து இலவசமாக நடவுப்பணி மேற்கொள்ளப் படும். இந்த நடவுப்பணிக்கு தேவையான நாற்று, பயனாளி களால் பாய், தட்டு நாற்றங் கால்களாக தயாரிக்கப்பட வேண்டும்.உரங்கள் இருப்புதஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி செய்வதற்கு தேவைப்படும் யூரியா 8 ஆயிரத்து 153 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 2 ஆயிரத்து 540 டன்னும், பொட்டாஷ் 4 ஆயிரத்து 571 டன்னும், காம்ப் ளக்ஸ் உரங்கள் ஆயிரத்து 575 டன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற் பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.இதில் வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சேகர், துணை இயக்குனர்கள் சீனிவாசன், சொக்கலிங்கம், வேளாண் பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளர் மணி, செயற்பொறியாளர் முருகதுரை, உதவி செயற்பொறியாளர்கள் மோகனகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர்கள் கருணாநிதி, மணிமாறன் மற்றும் விவசாயிகள் உடன் இருந்தனர்.

தினமணி

**பாசனத்துக்காக இன்று பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகள் திறப்பு: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**

சென்னை: திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி பாசன அமைப்பின் நேரடி மற்றும் மறைமுக பாசனப் பகுதிகளுக்கு கார் பருவ சாகுபடிக்காக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன பாசனத்துக்காக இன்று முதல் பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு அணைகள் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி பாசன அமைப்பின் நேரடி மற்றும் மறைமுக பாசனப் பகுதிகளுக்கு கார் பருவ சாகுபடிக்காக பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்து தண்ணீர் திறந்து விடுமாறு திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட விவசாயப் பெருமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. அவர்களது வேண்டுகோளினை ஏற்று, இன்று முதல் பாபநாசம், சேர்வலாறு மற்றும் மணிமுத்தாறு நீர்த்தேக்கங்களிலிருந்துகார் பருவ சாகுபடிக்காக தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டுள்ளேன்.இதனால், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், நாங்குனேரி, திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை வட்டங்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம், திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களிலுள்ள 37,435 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## வளி மண்டல மேலடுக்கு சுழற்சி: இடியுடன் கூடிய மழை பெய்யும் - வானிலை மையம் தகவல்

சென்னை, ஜூன். 17–

தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை தொடங்கினாலும் கடந்த சில நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. இந்த நிலையில் சென்னை உள்பட வட மாவட்டங்களில் நேற்று மாலை திடீரென 1 மணி நேரம் மழை பெய்தது. இரவிலும் மழை தூறிக் கொண்டு இருந்தது.

சென்னை மட்டுமின்றி புறநகர் பகுதியான அம்பத்தூர், ஆவடி, பட்டாபிராம், திருமுல்லைவாயல், திருநின்றவூர், கோவில் பதாகை, தாம்பரம், பல்லாவரம், குரோம் பேட்டை, மேடவாக்கம், கூடுவாஞ்சேரி, வண்டலூர், திருவொற்றியூர், மணலி உள்பட பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

இதில் சென்னை மீனம்பாக்கத்தில் 4.8 மி.மீட்டர் மழையும், நுங்கம்பாக்கத்தில் 3.8 மி.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது.

சென்னையில் இன்றும் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. அவ்வப்போது மழை தூறல்களும் விழுந்தது. ரம்மியமான காற்றும் வீசுவதால் சுட்டெரிக்கும் வெயிலால் அவதிப்பட்டு வந்த மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தென்மேற்கு பருவ மழை தொடங்கிவிட்டதால் மேற்கு தொடர்ச்சி மலை பகுதியையொட்டி உள்ள பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்து வரும்

நிலையில் வடக்கு ஆந்திரா கடலோர பகுதிகளில் வளி மண்டல மேலடுக்கில் ஒரு காற்று சுழற்சியும் உருவாகி உள்ளது.

இவை இரண்டும் சேர்ந்துள்ளதால் வானம் மேக மூட்டத்துடன் காணப்படுவதாகவும், இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு உருவாகி உள்ளதாகவும் சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தினகரன்

**கரூரில் திடீர் மழை**

கரூர், : கரூரில் நேற்று திடீரென பெய்த மழையால் ஒரு மணிநேரம் மின்தடை ஏற்பட்டது.கரூரில் நேற்று பகலில் கடுமையான வெயில் அடித்தது. மாலையில் திடீரென குளிர்ந்த காற்று வீசியது. பின்னர் சாரல் மழைபெய்தது. அவ்வப்போது விட்டு பெரிதாக தூறல் விழுந்ததால் குளிர்ச்சியாக இருந்தது. இந்நிலையில் நேற்று இரவு 8 மணியளவில் கரூர் பகுதியில் மின்சாரம் தடைபட்டது. ஒரு மணி நேரத்திற்கு பின்னர் மீண்டும் மின்சாரம் வந்தது.

**செவட்டை நோய் தாக்குதல் எதிரொலி திராட்சையில் இருந்து புடலைக்கு மாறும் விவசாயிகள்**

கம்பம், : திராட்சையில் அடிக்கடி செவட்டை நோய் தாக்குவதால், கம்பம் பகுதியில் விவசாயிகள் புடலங்காய் விவசாயத்திற்கு மாறி வருகின்றனர்.

கம்பம் பள்ளதாக்கில் சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் பன்னீர் திராட்சை விவசாயம் அதிகளவில் நடந்தது. கடந்த 20 வருடங்களாக திராட்சை விவசாயத்தில் ஆர்வமாக ஈடுபட்டு வந்தனர். ஆனால், அடிக்கடி தாக்கும் செவட்டை நோய் விவசாயிகளை நிலை குலைய

வைத்தது.இதனால், திராட்சையை நம்பி வங்கிகளில் வைக்கப்பட்ட நகைகளை திருப்ப முடியவில்லை. அவைகள் ஏலத்திற்கு செல்கின்றன. திராட்சை விவசாயிகள் தற்போது மெல்ல மெல்ல வாழை, காய்கறிகள் விவசாயத்திற்கு மாறி வருகின்றனர். திராட்சை பந்தல்களை அழிக்காமல் கோவங்காய், புடலங்காய் பயிரிடுகின்றனர். குறிப்பாக சுருளிப்பட்டி பகுதிகளில் அதிகமான அளவில் புடலங்காய் விவசாயம் நடக்கிறது. இங்கு விளையும் புடலங்காய் அதிகமான அளவில் கேரளாவிற்கு அனுப்பபடுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை லாபம் கிடைக்கிறது. இந்த பகுதிகளில் சுமார் 200 ஏக்கர் பரப்பில் விவசாயிகள் புடலங்காய் விவசாயத்திற்கு மாறி உள்ளனர். இதுகுறித்து விவசாயி பொம்முராஜ் கூறுகையில், திராட்சை விவசாயத்தில் எதிர்பார்த்த பலன் இல்லை. விவசாயிகளை ஊக்குவிக்கு எந்தவித நடவடிக்கையும் இல்லை. குறைந்த நாட்களில் அதிக பலன் தரக்கூடிய புடலங்காய் விவசாயத்திற்கு மாறி வருகிறோம். இதனை பறித்து கேரளா மாநிலத்திற்கும், தமிழகத்தின் முக்கிய நகரங்களாக உள்ள மதுரை, திருச்சி உள்ளிட்ட நகரங்களுக்கும் அனுப்புகிறோம். குறைந்த நாட்களில் அதிக பலன் கிடைப்பது மகிழ்ச்சியாக உள்ளது" என்றார். ஆராய்ச்சி நிலையத்தால் பயனில்லை: திராட்சை விவசாயத்தை ஊக்குவிக்க ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பட்டது. இங்கு பணியாற்றக்கூடிய பேராசிரியர்கள் பெயரளவில் பணியாற்றி வருகின்றனர். விவசாயிகளை ஊக்குவிக்கும் எந்த நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்வதில்லை.

**பூச்சிக்கொல்லி பரிசோதனை ஆய்வகம் உள்பட ரூ.4.24 கோடியில் கட்டிய புதிய கட்டிடங்களை முதல்வர் திறந்து வைத்தார்**

ஈரோடு, : ஈரோடு திண்டல் பகுதியில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.60 லட்சம் செலவில் கட்டப்பட்ட மாநில பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வக கட்டிடத்தை வீடியோ

கான்ப்ரன்சிங் மூலம் சென்னையில் இருந்து திறந்து வைத்தார். இதையடுத்து மாவட்ட கலெக்டர் பிரபாகர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.இதைதொடர்ந்து கலெக்டர் பிரபாகர் கூறியதாவது: புதிதாக திறக்கப்பட்டுள்ள மாநில பூச்சிக்கொல்லி மருந்து பரிசோதனை ஆய்வகம் மூலம் பூச்சிக்கொல்லி மாதிரிகளின் பவுதீக, வேதியியல் குணங்கள் ஆய்வு செய்யப்பட்டு தரக்குறைவான போலியான பூச்சிக்கொல்லி மாதிரிகள் கண்டறியப்பட்டு பூச்சிக்கொல்லி சட்டம் 1968ன்படி தரக்குறைவான மற்றும் போலியான பூச்சிக்கொல்லிமருந்துகளை தயாரித்தவர்களுக்கு ஆய்வு முடிவுகளின்படி சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் தரமான பூச்சிக்கொல்லி மருந்துகள் விவசாயிகளுக்கு கிடைக்கும்.

ஏற்கனவே கருங்கல்பாளையம் பகுதியில் தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த மாநில பூச்சிக்கொல்லி ஆய்வக பரிசோதனைக்கூடம் இனிமேல் இந்த புதிய கட்டிடத்தில் இயங்கும். ரூ.60 லட்சம் செலவில் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தின் கட்டி முடிக்கப்பட்டுள்ள இக்கட்டிடம் 3955 சதுர அடி கொண்டதாகும். இந்த ஆய்வகத்தின் மூலம் ஓராண்டிற்கு சராசரியாக 850 பூச்சிக்கொல்லி மாதிரி பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 1007 பூச்சிக்கொல்லி மாதிரிகள் பெறப்பட்டு 884 பூச்சிகொல்லி மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கலெக்டர் பிரபாகர் தெரிவித்தார். குளிபூலப்பாளையத்தில் ரூ.1 கோடி செலவில் கட்டப்பட்ட ஒழுங்குமுறை விற்பனை கூடக்கட்டிடம், கவுந்தப்பாடியில் ரூ.24 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கிராமிய கிடங்குக்கட்டிடம், கருமாண்டிசெல்லிபாளையத்தில் ரூ.20 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்ட அக்மார்க் ஆய்வுக்கூட கட்டிடம் உள்பட மாவட்டம் முழுவதும் மொத்தம் ரூ.4.24 கோடி மதிப்பிட்டில் கட்டி முடிக்கப்பட்ட 6

புதிய கட்டிடங்களை நேற்று ஒரேநாளில் சென்னை தலைமை செயலகத்தில் இருந்து வீடியோகான்பிரன்சிங் மூலம் நேற்று திறந்து வைத்தார்.

**வண்ணத்துப்பூச்சி பூங்கா திறப்பு**

கூடலூர், : நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே பொணீன்னூரில் உள்ள அருசு தோட்டக் கலைப் பண்ணையில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சத்தில் வண்ணத்துப்பூச்சி பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. இப்பங்காவை தமிழக முதல்வர் ஜெயலலிதா நேற்று வீடியோ கான்பரன்சிங் மூலம் நேற்று திறந்தார். இப்பூங்காவிற்காக 0.25 ஏக்கரில் பசுமை குடில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.இதில் வண்ணத்துப்பூச்சிகளின் உணவு மற்றும் இனப்பெருக்கம்,முட்டையிடுதல் ஆகியவற்றிற்கான மலர் செடிகள் வளர்க்கப்பட்டு சீரான வெப்பநிலையும் குடிலில் ஏற்படுத்தப்பட்டள்ளது.இப்பகுதிக்கு ஆண்டு முழுதும் வண்ணத்துப்பூச்சி வரவழைக்கும் வகையிலும், சுற்றுலா பணிகளை கவரும் வகையிலும் இப்பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.நிகழ்ச்சியில் ஆவின் தலைவர் மில்லர், கூடலூர் நகராட்சி தலைவம் ரமாமணி, துணைத் தலைவர் ராஜா தங்கவேல், பந்தலூர் நகர செயலாளர் ராஜா, கூடலூர் ஒன்றிய செயலாளர் பத்மநாபன், தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சிபிலா மேரி, அலுவலர் ஜெயலட்சுமி, கிடங்கு மேலாளர் ராமசாமி, உதவி வேளாண் அலுவலர் அம்பிராஜ், வினோத், சரவணன், கோகுல், அட்மா திட்ட அலுவலர்கள் யமுனா பிரியா, பானுபிரியா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கிணறு வெட்ட அனுமதி கட்டணம் குறைப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**

பெரம்பலூர், : கிணறுவெட்டவோ, ஆழப்படுத்தவோ, போர்வெல் அமைக்கவோ ரூ.5,000 செலுத்த வலியுறுத்திய அரசாணையை விவசாயிகளின் ஒட்டுமொத்த எதிர்ப்புக்கு அடிபணிந்தது ரூ. 100 செலுத்தினால் போதுமென தமிழக அரசு திருத்தம் செய்து அறிவித்தள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டம் கிணற்றுப்பாசனத்தை நம்பியுள்ள மாவட்டமாகும். இங்கு புதிதாக கிணறுவெட்டத் தேவையான வங்கிக்கடன் வழங்கத்தடைவிதித்து பெரம்பலூர் மாவட்டம் கருப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் கிணறுவெட்டவோ, ஆழப்படுத்தவோ முடியாமல் விவசாயிகள் பெரிதும் அவதிப்பட்டனர். இந்நிலையில் தமிழக அரசால் வெளியான புதிய அரசாணையில், புதிய கிணறு தோண்டவும், பழையகிணறை ஆழப்படுத்தவும், போர்வெல் அமைக்கவும் ஊராட்சிமன்றத் தலைவரிடம் விவசாயி ரூ. 5,000க்கான டிடி எடுத்து விண்ணப்பிக்க வேண்டுமென்றும், கிணறுவெட்டும் நபரோ, நிறுவனமோ கலெக்டரிடம் ரூ. 15,000க்கு டிடி எடுத்து விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டது. இதனால் கிணறுவெட்டும் நபரோ, நிறுவனமோ, இத்தொகையினை விவசாயி தலையில் சுமத்த முற்படுவார்கள். இதனால் விவசாயிகள் கிணறுவெட்ட, அனுமதி பெற தேவையின்றி ரூ. 20,000 செலவுசெய்ய வேண்டும். இதுகுறித்த துண்டுப் பிரசுரங்கள் கலெக்டர் பெயரில் அனைத்து ஊர்களிலும் தரப்பட்டது. இது வறுமையில் வாடும் விவசாயிகளுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது.எனவே தமிழக அரசு புதிதாகப் பிறப்பித்துள்ள அரசாணை 26ஐத் திரும்பப்பெற வேண்டும். பாதிக்கப்படும் விவசாயிகள் நிலையை மாவட்ட நிர்வாகம் அரசின் கவனத் திற்குக் கொண்டுசெல்ல வேண்டும் என தினகரன் இதழில் கடந்த

மாதம் 15ம்தேதி செய்தி வெளியிட்டது. இதன் எதிரொலியாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட அனைத்து விவசாயிகள் சங்கத்தினரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலெக்டர் தரேஸ்அகமதுவிடம் முறையீடு செய்தனர். ஒட்டுமொத்த விவசாயிகளின் எதிர்ப்பை, கலெக்டர் தமிழக அரசுக்கு அந்தக்கூட்டத்தின் இடையே தெரிவித்தார். இந்நிலையில் தமிழக அரசு சில தினங்களுக்கு முன்பு வெளியிட்ட அரசாணையில், கிணறுவெட்டவோ, ஆழப்படுத்தவோ, போர்வெல் அமைக்கவோ ரூ. 5,000க்கு பதிலாக ரூ. 100 செலுத்தினால் போதுமென அந்தர் பல்டி அடித்ததுபோல் திருத்தம் வெளியிட்டுள்ளது. இதற்கு விவசாயிகள் மத்தியில் வரவேற்பு எழுந்துள்ளது. இதனைசுட்டிக்காட்டி செய்தி வெளியிட்ட தினகரன் நாளிதழுக்கு விவசாயிகள் சங்கங்கள் பாராட்டும் தெரிவித்துள்ளது.

**தஞ்சை மாவட்டத்தில் 80,000 ஏக்கர் பயிர்களுக்கு குறுவை தொகுப்பு உதவி திட்டம் 4 கட்டமாக செயல்படுத்த முடிவு**

தஞ்சை, : தஞ்சை மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கர் குறுவை சாகுபடி பயிர்களுக்கு குறுவை தொகுப்பு உதவித் திட்டம் 4 கட்டமாக செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. திருவையாறு அருகே அள்ளூரில் சண்முகவேல் என்ற விவசாயி நிலத்தில் இயந்திரம் மூலம் குறுவை நடவு பணி நடப்பதை கலெக்டர் சுப்பையன் நேற்று ஆய்வு செய்தார். பின்னர் கலெக்டர் சுப்பையன் நிருபர்களிடம் கூறியதாவது: டெல்டா மாவட்டங்களில் நிலத்தடி நீரை பயன்படுத்தி அதிக பரப்பில் குறுவை சாகுபடி மேற்கொள்ள நடவு இயந்திரம் மூலம் நெல் நடவு பணிகளை மேற்கொள்ள விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

நடப்பாண்டு தஞ்சை மாவட்டத்தில் 80 ஆயிரம் ஏக்கரில் குறுவை சாகுபடி

செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம். இதில் இதுவரை 18 ஆயிரம் ஏக்கர் சாகுபடி நடந்துள்ளது. 80 ஆயிரம் ஏக்கருக்கும் குறுவை தொகுப்பு உதவி திட்டம் செயல்படுத்தப்படும். குறுவை தொகுப்பு உதவி திட்டத்தில் இயந்திரங்கள் மூலம் நடவு செய்ய விரும்புவோருக்கு நடவு இயந்திரத்துக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.2,375 வழங்கப்படும். இதேபோல் நுண்ணூட்ட கலவை, உயிர் உரங்கள், இடுபொருட்களுக்கு ஏக்கருக்கு ரூ.315 வழங்கப்படும். தேவையான நிலங்களுக்கு ஜிப்சம் இலவசமாக வழங்கப்படும். இதற்கு தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

குறுவை தொகுப்பு உதவி திட்டம் கடந்த 1ம் தேதி முதல் 15ம் தேதி வரை ஒரு கட்டமாகவும், 15ம் தேதி முதல் 30ம் தேதி வரை 2ம் கட்டமாகவும், ஜூலை 1ம் தேதி முதல் 15ம் தேதி வரை 3ம் கட்டமாகவும், 15ம் தேதி முதல் 31ம் தேதி வரை 4ம் கட்டமாக செயல்படுத்தப்படவுள்ளது. அதன்படி கட்டணமின்றி நடவு இயந்திரம் மூலம் நடவு செய்ய விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்துறை அலுவலகங்களிலோ அல்லது வேளாண்மை பொறியியல் துறை அலுவலகங்களிலோ விண்ணப்பங்களை பெற்று தங்கள் வயல் சாகுபடி விவரங்களை குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களை ஒருங்கிணைத்து அந்தந்த பகுதி வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர்கள் மூலம் நடவு இயந்திரம் ஒதுக்கீடு செய்து இலவசமாக நடவுப்பணி மேற்கொள்ளப்படும்.

வேளாண் பொறியியல் துறை மூலம் கும்பகோணம் ஒன்றியத்தில் 40 நடவு இயந்திரங்கள். திருப்பனந்தாள், திருவையாறு ஒன்றியத்தில் தலா 20 இயந்திரங்கள். ஒரத்தநாடு, தஞ்சை, பட்டுக்கோட்டை ஒன்றியங்களில் தலா 10 இயந்திரங்கள். இதர ஒன்றியங்களில் தலா 5 இயந்திரங்கள்

ஈடுபடுத்தப்படவுள்ளன. இவை மட்டுமின்றி தனியார் நிறுவனங்கள் மூலம் 100க்கும் மேற்பட்ட நடவு இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டு நடவு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது. இதுதொடர்பான விவரங்களுக்கு வேளாண் பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளரை 04362 235168 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். விவசாயிகள் தங்கள் வயலில் கட்டணமில்லாமல் நடவு பணிகளை மேற்கொண்டு குறுவை சாகுபடியில் அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம் என்றார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம் உடனிருந்தனர்.

## தஞ்சையில் நாளை கறவை மாடு வளர்ப்பு பயிற்சி வகுப்பு

தஞ்சை, : தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கறவை மாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை பயிற்சி முகாம் நாளை நடக்கிறது. தஞ்சை- திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் இயங்கி வரும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தை சேர்ந்த கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கறவைமாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த ஒரு நாள் பயிற்சி நாளை காலை 9 மணிக்கு நடக்கிறது.

இந்த பயிற்சியில் கலந்து கொள்ள விரும்வோர் தங்களது ஆதார் அடையாள அட்டையுடன் அல்லது வேறு ஏதேனும் அடையாள அட்டையுடன் வர வேண்டும். கூடுதல் தகவல் அறிய 04362 204009 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு பேராசிரியர் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## ஜூன் 19 விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மதுரை, : மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் தலைமையில் வரும் 19ம் தேதி கலெக்டர் அலுவலகத்தில் காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் விவசாயம் தொடர்பான அனைத்துத் துறை அதிகாரிகளும் கலந்துகொள்ள உள்ளனர். விவசாயம் தொடர்பான தனி நபர் பிரச்னையாக இருப்பின் கோரிக்கைகள் மனுக்களாகவும், பொதுப் பிரச்னையை மன்றத்தில் கோரிக்கையாகவும் தெரிவிக்கலாம். இத்தகவல் கலெக்டர் அலுவலகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.